தனிப் பிரதி ரூ. 10/–
ஆண்டுச் சந்தா ரூ. 100/–
ஆயுள் சந்தா ரூ. 1000/–

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 11 இதழ் : 9 ஆகஸ்ட் – 2015



## ஷாலோம்

## ஊழியப்பாதையில் தேவ கிருபையினால்

## 25 வது ஆண்டில்



**நீங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் ஆயிரமடங்கு அதிகமாகும்படி உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொல்லியபடியே உங்களை ஆசீர்வதிப்பாராக.** உபாகமம் 1 : 11

ஆசிரியர். பேராயர். வே. தேவதாஸ்

# உங்கள் சகோதரனிடமிருந்து...



கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி, தேவன் எங்களுக்குக் கொடுத்த தரிசன பணியான குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் வாழும் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் "பரிசுத்த ஆவியானவரின் பெலத்துடன் 24 ஆண்டுகளை முடித்து கடந்த 01.07.2015 முதல் 25ம் ஆண்டில் அடியெடுத்து வைக்க தேவன் கிருபை தந்துள்ளார்". தேவனுக்கே மகிமை செலுத்துகிறோம். இம்மட்டும் ஜெபித்து, தாங்கிய உங்கள் யாவருக்காகவும் தேவனைத் துதித்து, நன்றிகளை கூறுகிறோம்.

இதுவரை தேவ கிருபையால் 580 பீல் சுதேச ஊழியர்கள் மற்றும் 120 அலுவலக, மற்றும் பீல் சமுதாய முன்னேற்றப் பணியாளர்களை எழுப்பவும், 660க்கும் அதிகமான சபைகளை எழுப்பவும்; 303 கிராம ஆலயங்களை கட்டியெழுப்பவும்; 25,000க்கும் அதிகமான பீல் ஆதிவாசி குடும்பங்களை கிறிஸ்துவண்டை வழி நடத்தவும் தேவன் தந்த கிருபைக்காக அவரைத் துதிப்போம்.

கர்த்தருக்குச் சித்தமானால் அனைத்து பீல் சுதேச ஊழியர்களுடன் சபையாக இணைந்து 2016 ஜூலை மாதத்திற்குள் (வெள்ளிவிழா ஆண்டு நிறைவின்போது) 1000 பீல் சுதேச ஊழியர்கள்; 1000 கிராம சபைகள், 500 கிராம ஆலயங்களை கட்டவும் குறைந்தது 1 இலட்ச குடும்பங்களை கிறிஸ்துவண்டை வழிநடத்தவும் ஜெபத்துடன் இணைந்து செயல்படுகிறோம்.

இந்த இருமடங்கு மிஷனெரி பணியின் வளர்ச்சிக்காகவும், இந்த வெள்ளிவிழா ஆண்டு நிறைவுத் திட்டங்களுக்காகவும் நீங்களும் கருத்தாக ஜெபியுங்கள். ஷாலோம் ஊழியங்களை ஜெபித்து தாங்கும்படியாக, குறைந்தது 5 புதிய ஆதரவாளர்களை அறிமுகம் செய்து வைக்க கேட்கிறேன். உங்கள் யாவருக்காகவும் நாங்கள் குடும்பமாக, ஷாலோம் ஊழியர்களாக ஜெபித்து வருகிறோம்.

"நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன்." எபி. 6:14– வாக்கின்படி தேவன்தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

(பேராயர் V. தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள : 09377445468 (குஜராத்)



# ஆயிரமடங்கு ஆசீர்வதிக்கும் தேவன்

சிறப்புச் செய்தி : **பேராயர். வே. தேவதாஸ்**

"நீங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் ஆயிரமடங்கு அதிகமாகும்படி உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொல்லியபடியே உங்களை ஆசீர்வதிப்பாராக". உபா. 1 : 11 ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாகிய கர்த்தர் தம் ஜனமாகிய இஸ்ரவேலரை 400 ஆண்டுகள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து, ஆபிரகாமிற்கு ஆதியாகமம் 15ம் அதிகாரம் 13–16 வரை கொடுத்த வாக்குத்தத்தத்தின்படி தம் தாசனாகிய மோசே மூலமாக பலத்த கரம், ஓங்கிய புயத்துடன் விடுவித்தார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தையும் சுதந்தரிக்க கிருபை செய்தார்.

தேவன் இஸ்ரவேலரை தம் ஜனமாகத் தெரிந்து கொண்டபடியால் கானான் தேசத்தை தந்து ஆசீர்வதித்தது மட்டுமன்றி எந்த நோக்கத்திற்காக இஸ்ரவேல் ஜனத்தை தம் சொந்த ஜனமாக தெரிந்துக் கொண்டாரோ அந்த நோக்கத்தை வெளிப்படுத்தி தேவ ஜனங்கள் உலகத்தில் உள்ள மற்றவர்களைக் காட்டிலும் பிரித்தெடுக்கப்பட்ட ஜனங்களாக அவருடைய நியமங்கள், கற்பனைகள், விதிகளின்படி நடக்க ஆலோசனைகளை குறிப்பாக உபாகமம் புஸ்தகத்தின் வாயிலாக தம் தாசன் மோசே மூலமாக மிக அழகாக திருவுளம் பற்றியுள்ளார். இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே எனக்குப் பிரியம் என்று தம் ஜனத்தை ஆயிரமடங்கு ஆசீர்வதிக்க சித்தம் உள்ளவராக இருக்கிறார். ஆகையால் தேவன் தம் ஜனமாகிய இஸ்ரவேலை ஆசீர்வதிக்க தேவன் எதிர்பார்க்கும் காரியங்களையும் வெளிப்படுத்தி உள்ளார்.

24 வருடங்களுக்கு முன்பாக பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் ஊழியங்களை ஆரம்பிக்கும் போது நம்முடைய விசுவாசிகள் மிகவும் ஏழைகளாக, பாவ, சாப, நோய்கள், பிசாசின் கட்டுகளிலிருந்து மிகவும் ஏழ்மையாக அடிமைத்தனத்தில் வாழ்ந்து வந்தார்கள். இன்று இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம், கல்வாரி அன்பு அவர்கள் வாழ்விலும், குடும்பத்திலும் தெய்வீக ஆசீர்வாதங்களை கொண்டு வந்துள்ளது. இந்த 25ம் வெள்ளிவிழா ஆண்டிற்காக நான் ஜெபித்த போது தேவன் தாமே இந்த பீல் விசுவாசக் குடும்பங்களை உபாகமம் 1:11 ன்படி ஆயிரமடங்கு ஆசீர்வதித்து, பீல் மக்களை அவர்கள் குடும்பத்திற்கும், கிராமத்திற்கும், சபைக்கும், தேசத்திற்கும் ஆயிரமடங்கு ஆசீர்வாதமாக உயர்த்த வாக்குத்தத்தம் கொடுத்துள்ளார். அதே வேளையில் விசுவாசிகள் பின்பற்றும்படியாக உபாகமம் 6ம் அதிகாரத்தின் மூலம் சில காரியங்களை கற்றுக் கொடுக்கும்படியாக தேவன் திருவுளம்பற்றினார்.

தேவஜனங்கள் நன்றாக இருப்பதற்கும், ஆசீர்வதிக்கப்படுவதற்கும் தேவன் என்ன சொல்கிறார். "இஸ்ரவேலே, நீ நன்றாயிருப்பதற்கும், உன் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி, பாலும் தேனும் ஓடுகிறதேசத்தில் நீ மிகவும் விருத்தியடைவதற்கும், அவைகளுக்குச் செவிகொடுத்து, அவைகளின்படி செய்யச் சாவதானமாயிரு" உபா. 6:3

**முதலாவதாக,** உபாகமம் 6:5 "நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்பு கூருவாயாக" என்ற வசனத்தின்படி "தேவனிடத்தில் அன்பு கூரவேண்டும்." நம்முடைய தேவன் நம்மிடத்திலும் எதிர்பார்ப்பது அன்புதான். பிதாவாகிய தேவன் இயேசு கிறிஸ்துவை நமக்காக உலகத்தில் அனுப்பி அன்பு கூர்ந்தார். நாமும் தேவனிடத்தில் முழுமையாக அன்பு கூர வேண்டும் என்று விரும்புகிறார். தாவீது என் பெலனாகிய கர்த்தாவே உம்மில் அன்பு கூருவேன் (சங். 18:1)ல் கூறுகிறான். இயேசுவை நாம் நேசிக்கும் போது நம் வாழ்வு வித்தியாசமாக இருக்கும். ஜெப வாழ்வு, வேதவாசிப்பு, ஊழியம் தேவன் கொடுப்பது வித்தியாசமாக இருக்கும். என்னுடைய 20ம் வயதில் தேவன் என்னை நேசித்து என்னை மரணக் கட்டிலிருந்து விடுதலை தந்து, அபிஷேகித்தார். "நீ என்னை நேசிக்கிறாயா?" என்ற வார்த்தை மூலமாக பீல் மக்களின் அறுவடை பணிக்கு அழைப்புக் கொடுத்து இன்றும் ஊழியங்களை நிறைவேற்றி வருகிறார்.

**இரண்டாவதாக,** உபா. 6:6 இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. தேவனுடைய வசனத்தை நம் இருதயத்தில் வைத்து அதன்படி நடக்கும் போது தேவன் ஆசீர்வதிக்கிறார்.

- "கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்." சங்கீதம். 128:1
- "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்." சங்கீதம் 1 : 2,3
- "இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய்" யோசுவா 1 : 8

தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டு, வாசித்து தியானித்து அதன்படி நடக்கும்போது தேவன் காரியங்களை வாய்க்கச் செய்கிறார். தேவனுடைய ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக் கொள்கிறோம்.

**மூன்றாவதாக,** உபா. 6 : 12 "நீ அடிமைப்பட்டிருந்த வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து உன்னைப் புறப்படப்பண்ணின கர்த்தரை மறவாதபடிக்கு எச்சரிக்கையாயிரு" நம்மை மீட்டு, இரட்சித்து சகல ஆசீர்வாதங்களை தந்து நாம் திருப்தியாகும் போது, தேவனை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. நம் வாழ்வில் பெருமை வந்து, நான்தான் இவைகளை சம்பாதித்தேன் என்று சொல்லி தேவனை மறந்துவிடக் கூடாது.

**நான்காவதாக,** உபா. 6 : 16 "நீங்கள் மாசாவிலே செய்தது போல, உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பரிட்சை பாராதிருப்பீர்களாக." தேவனை பரிட்சை பார்ப்பதும்; ஆவியானவரை துக்கப்படுத்துவதும் பரலோக ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ள தடையாயிருக்கும். தேவனுக்கு

முன்பாக இஸ்ரவேல் ஜனங்கள் முறுமுறுத்தார்கள். அவர்களில் காலேப், யோசுவாவைத் தவிர வேறொருவரும் கானான் தேசத்தில் பிரவேசிக்க முடியவில்லை. ஆகவே வாழ்க்கைப் பாதையிலும்; ஊழியப்பாதையிலும் ஆவியானவரை நாம் துக்கப்படுத்தாதபடி தேவனை பரிட்சை பாராதிருப்போமாக.

**ஐந்தாவதாக,** உபா. 6 : 7 "நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக் கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி.... " நாம் ஆண்டவரை அறிந்து நேசித்து வாழ்வதைப் போல நம் சந்ததி, பிள்ளைகள் அவரை அறிய வேண்டும். பிதாவாகிய தேவன் இஸ்ரவேல் ஜனங்களை மிக முக்கியமாக பிள்ளைகளுக்குப் பூர்வ நாட்களை எடுத்துச் சொல், குறிப்பாக பஸ்கா பண்டிகை நாள் மூலமாக தேவனுடைய விடுதலை, அன்பை எடுத்துச் சொல்ல கூறுகிறார். கற்பனைகளை, நியமங்களை பின்பற்ற பிள்ளைகளுக்குப் போதிக்கக் கூறியுள்ளார். நாம் அதிகமாக நேசிக்கும் நம் பிள்ளைகள் தேவ அன்பை நினைத்து பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை விட்டு விடக்கூடாது. நாங்கள் குடும்பமாக பல நேரங்களில் கூடும்போது எங்கள் பிள்ளைகளுடன் 24 வருடங்கள் தேவன் நடத்தி வந்த பாதைகளை, எண்ணிப் பகிர்ந்து தேவனைத் துதிப்போம். அவர் அன்பால் நிரப்பப்படுவோம். நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்ற வார்த்தையின்படி குடும்பமாக தேவனை சேவிக்க அர்ப்பணிப்போம்.


**கடைசியாக,** உபா. 6 : 19 "கர்த்தர் தாம் சொன்னபடி உன் சத்துருக்களையெல்லாம் உன் முகத்திற்கு முன்பாகத் துரத்திவிடுவதற்கும், நீ கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையும் நன்மையுமாய் இருக்கிறதைச் செய்வாயாக. " நம்முடைய வாழ்க்கைப் பாதையிலே, குடும்பத்திலே, ஊழியப்பாதையிலே அனுதினமும் செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் ஆராய்ந்துப் பார்க்க வேண்டும். நம் சுய புத்தியில் நாம் எதையும் செய்து விடாதபடி தேவ பாதத்தில் காத்திருந்து, ஜெபித்து, வசனத்தின்படி நடக்கும் போது நாம் கர்த்தருக்கு பிரியமானதைச் செய்வோம். நாம் செய்கிற ஒவ்வொரு காரியமும் அவர் பார்வைக்கு செம்மையானதா? நன்மையானதா? என ஆராய்ந்து பார்ப்போம். அநேக வேளைகளில் ஊழியப்பாதையில் கடினமான வேளைகளில் இயேசு இருந்தால் என்ன செய்வார் என்று அடிக்கடி நினைத்து தீர்மானங்களை நான் எடுப்பேன். குறிப்பாக மற்றவர்களை மன்னிப்பது, நன்மையானவைகளை செய்வது; கிறிஸ்துவுக்காக பாடுகளை ஏற்றுக் கொள்வது; சுவிசேஷத்திற்காக தியாகமாக வாழ்வது என தேவ பார்வையில் செம்மையானதை, நன்மையானதை செய்யும் போது தேவன் நம்மை ஆசீர்வதிப்பார்.

இந்தக் காரியங்களை நாம் ஏற்றுக் கொண்டு, அவரை நேசித்து அவருக்காக ஜீவிக்கும் போது "உன் தேவனாகிய கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார். " "ஆயிரமடங்கு ஆசீர்வதிப்பார்" என்ற வாக்குத்தத்தங்கள் நிறைவேறவும் தேவன்தாமே நம்மை ஆயிரமடங்கு ஆசீர்வதிக்கவும் நம்மையும், நம் குடும்பத்தையும் தேவன் தந்த ஊழியங்களையும் அர்ப்பணிப்போம் !

**கர்த்தர் உன் களஞ்சியங்களிலும்,**
**நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம்**
**கட்டளையிடுவார்; உபா. 28 : 8**

# அழைப்பின் குரல் கேட்டேன்...

சிறப்பு சாட்சி : **பேராயர். வே.தேவதாஸ்**



"நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்." – எரே. 1:5

## பிறப்பும் அறிமுகமும்

குட்டி ஜப்பான் என்று அழைக்கப்படும் செல்வ செழிப்பான சிவகாசி பட்டணத்தில் ***1960ம் ஆண்டு பிப்ரவரி 23ம் தேதி*** பக்தியுள்ள கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தேன். என்னுடைய தாத்தா (அப்பாவின் அப்பா) திரு. ஜெபமணி அவர்கள் ஆசிரியராக பணியாற்றிக் கொண்டு ராக்லாண்டு நினைவு ஆலயத்தைக் கட்டி எழுப்பவும் ஆலய ஊழியக்காரியங்களில் முன்னோடியாகவும் திகழ்ந்தவர்கள். என் தகப்பனார் திரு. வேதமணி அவர்கள் சுகாதார ஆய்வாளராக பணியாற்றியும், ஆலயக் காரியங்களிலும், குறிப்பாக பாடகர் குழு அமைத்து தேவனை மகிமைப்படுத்தியும் வந்தார்கள். என் தாய் வழியில் தாத்தா, பாட்டி திரு. ஜோசப் – திருமதி. அமுதா அவர்கள் இந்திய மிஷனெரி சங்கத்தில் (IMS) பளியர்கள் மத்தியில் பணியாற்றிய நற்செய்தி தொண்டர் மோசஸ் முத்துமாலை அவர்களைத் தொடர்ந்து பணியாற்றிய திருத்தொண்டர்கள். என் தாயார் திருமதி. ஜாய் அவர்கள் தேவனுக்குப் பயந்து நடந்த ஆவிக்குரிய தாயாராகவும், தயாள குணத்திற்கு எடுத்துக்காட்டாகவும் வாழ்ந்தார்கள்.

## இளமைப்பருவம்

நான் நல்ல குடும்ப பின்னணியில் பிறந்தாலும் கூட, நான் பிறந்து 40 நாட்களில் என் தாயாரை தேவன் எடுத்துக் கொண்டார். அன்புத் தாயின் அன்பு முகம் கூட அறியாத துர்ப்பாக்கியசாலியான நான் சிற்றன்னையின் வளர்ப்பில் வளர்ந்தேன். வாலிபப் பிராயத்தில் பலவிதமான உலக மாயையில் சிக்கி தேவனை விட்டு தூரமானதால் என் தகப்பனாரும் என்னை வெறுத்து, 1975ம் ஆண்டு செப்டம்பர் மாதம் என்னுடைய 16ம் வயதில் என்னை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டார்கள். நன்கு படிக்க வாஞ்சையாய் இருந்த என் கல்லூரி படிப்பும் நின்று விட்டது. என்னைக் குறித்து பரிதபித்தவர்கள் அநேகர். ஆனால் நேசித்து பராமரிப்போர் யாருமின்றி மனம் போன போக்கில் அலைந்து திரிந்து கூலி வேலைகளைச் செய்து என் வயிற்றை நிரப்பினேன்.

## மாயையான வாழ்வு

இறுதியில் என் மூத்த சகோதரனுடைய உதவியால் கோவையில் மொத்த வியாபாரம் செய்யும் கடையொன்றில் வேலை செய்யும்படி பணியாளராக அமர்த்தப்பட்டேன். ஆரம்ப நாட்களில் கடினமான வேலையாய் இருந்தாலும் மனதில் பொறுமையுடன் உண்மையாகப் பணியாற்றினேன். படிப்படியாக முன்னேறினேன். கைகளில் பணம் கிடைத்தது. சிற்றின்ப கேளிக்கைப் படங்கள் என் வாழ்வில் மன சமாதானத்தையும் நான் தேடும் அன்பையும் தரவில்லை. என்னைச் சுற்றி இருப்பவர்கள் என்னுடைய பணத்திற்காக என் உண்மை உழைப்பிற்காக நேசித்தார்களே தவிர உண்மையான அன்பைக் காட்டவில்லை. நான் தங்கியிருந்த வீட்டின் மாடியில் சென்று வானத்தைப் பார்த்து "அம்மா–அம்மா" என்று கண்ணீர் விட்டு அழுதேன். பாசமுள்ள குடும்பங்களைப் பார்க்கும்போது இப்படிப்பட்ட சிலாக்கியங்கள் எனக்கு இல்லையே என்று ஏக்கமுற்றேன். உலக வாழ்க்கை வேண்டாம் என்று முடிவு செய்து ஒரு பாட்டில் விஷத்தை எடுத்துக் குடித்து உயிரை மாய்த்துக் கொள்ள பிரயாசப்பட்டேன், அதுவும் பயனற்றுப் போய்விட்டது. நான் வேலை பார்த்த ஸ்தலத்திலும் என்னை வெறுக்க ஆரம்பித்தார்கள்.

## கிறிஸ்துவில் புதுவாழ்வு

மறுபடியும் கோவைப் பட்டணத்தில் செய்வதறியாது அலைந்துக் கொண்டிருந்த வேளையில் பாக்கியம் அம்மாள் அவர்கள் எனக்கு அறிவுரைகள் கூறி அவர்கள் மகன் மோசஸ் சாம்சன் அவர்களிடம் பரிந்து பேசி அவர்கள் தொழிலைக் கவனிக்கும்படி வைத்தார்கள். என் மனதில் இன்னும் தேவ சமாதானம் இல்லை. ஞாயிற்றுக் கிழமை போதகர். ஜோயல் ஆனந்தராஜ் அவர்கள் வீட்டிற்கு ஜெப ஆராதனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

ஆராதனை நடந்துக் கொண்டிருக்கும் வேளையில் அனைவரையும் வேடிக்கையாகப் பார்த்தேன். கிட்டத்தட்ட அனைவருமே கல்லூரியில் படிக்கும் மாணவர்கள். பேராசிரியர்கள், மற்றும் உயர்நிலையில் இருப்பவர்கள். நான் ஒரு மூலையில் அமர்ந்து கொண்டு இருக்கும் வேளையில் தேவனுடைய பிரசங்க வார்த்தை எனக்கு நேராக வந்தது. "உலகத்தார் அன்பை விட கல்வாரி அன்புதான் மிகப்பெரியது." என்ற வார்த்தையின் மூலம் தேவன் என்னுடன் இடைப்பட்டார். கண்ணீருடன் கல்வாரி அன்பிற்காக ஜெபித்தபோது கல்வாரிக் காட்சியின் மூலம் கல்வாரி அன்பினால் என்னை நிரப்பினார். என் சரீரத்திலுள்ள பலவீனங்களை நீக்கி சுகத்தையும் தேவன் தந்தார். ஆராதனை வேளையில் (அனைவரும் துதித்துக் கொண்டிருக்கும்போது) தீர்க்கதரிசனமாக "தேவதாஸ்! யார் அந்த தேவதாஸ்? என்ற சத்தம் கேட்டது. நான் வேறு யாராவது நல்ல தேவதாஸ் இருப்பார்கள் என்று நினைத்தேன். ஆனால் பரிசுத்த ஆவியானவர் என் மேல் அளவில்லாமல் ஊற்றப்பட்டார். என்னுடைய கடந்த கால வாழ்க்கையின் வீழ்ச்சியையும் வருங்காலத்தில் எனக்குத் தேவன் தரும் (தற்போது நடக்கும் ஊழியப்பாதையை) தேவ திட்டத்தையும் தீர்க்கதரிசனமாக தேவன் உரைத்தார். ஒரு ஜாதி மக்களை உனக்குத் தருவேன். பவுலைப் போல அப்போஸ்தல ஊழியத்தை உனக்குக் கொடுப்பேன் என்று தேவன் வாக்குரைத்தார்.

ஊழிய அழைப்பின் உறுதிப்பாட்டுடன் போதகர். ஜோயல் ஆனந்தராஜ் அவர்கள் சபையில் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வந்தேன். ஊழிய அழைப்பை சந்திக்க நேரமில்லாமல் பிற்காலத்தில் செய்து கொள்ளலாம் என்று நினைத்து கை நிறைய பணம் சம்பாதித்து ஊழியத்திற்கு கொடுக்கலாம் என்று தீர்மானித்தேன். 2 வருடங்கள் கடந்து சென்றன. புதிதாய் நான் ஆரம்பித்த தொழில் காரியமாய் அலைந்துக் கொண்டிருந்த போது 1981 அக்டோபர் மாதத்தில் FMPB மூலமாய் நடத்தப்பட்ட கிதியோனியர் முகாமில் மறுபடியும் ஆண்டவர் என்னைச் சந்தித்தார். அந்த முகாமில் என்னுடைய சொந்த பட்டணமாகிய சிவகாசியில் 130 வருடங்களுக்கு முன்பாக இங்கிலாந்து தேசத்திலிருந்து வந்த ராக்லாண்டு துரை ஐயா அவர்கள் சுவிசேஷத்தைக் கூறி அறிவித்த சம்பவங்களைக் கூறினார்கள்.

சிவகாசி மண்ணில் இரத்த சாட்சியாக மரித்தார் என்று சரித்திரம் கூறுகிறது. 90 கோடி மக்கள் வாழும் இந்த பாரத தேசத்திற்கு வெளி நாட்டு மிஷனெரிகள் வர முடியாது. நீதான் ராக்லெண்ட் என்று பேசினார். சந்தியா வேளையில் "என்னை நேசிக்கிறாயா? என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்று எனக்கு உரைத்த தீர்க்கதரிசன வார்த்தைகளை உறுதிப்படுத்தினார். மிஷனெரி ஊழியத்திற்கு கீழ்ப்படிந்த என்னை தேவன் FMPB மூலமாக 1982 முதல் 1985 வரை வேதாகமப் பயிற்சி பெற்று வட இந்தியாவில் உத்திரப்பிரதேசம், பீஹார் மாநிலங்களில் பயன்படுத்தினார்.

## இல்லற வாழ்வின் ஆசீர்வாதம்

1985ம் வருடம் ஜுலை 8ம் தேதி என்னை நேசிக்கவும், என்னோடு இணைந்து ஊழியம் செய்யவும் ஏற்றதுணையான **IMS** ல் ஒடிசாவில் பணியாற்றிக் கொண்டிருந்த மிஷனெரியான வஹிதா அவர்களை தேவன் எனக்கு வாழ்க்கைத் துணையாகக் கொடுத்தார். திருமணமாகி சில தினங்களில் ஜெபித்துக் கொண்டிருக்கும்போது, கைகளில் வில், அம்பு வைத்துக் கொண்டு மலைகளில் ஓடும் மக்கள் மத்தியில் நாங்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் தரிசனத்தை ஆண்டவர் காட்டினார். மேலும் கோவை பட்டிணத்தில் 14–7–1985ல் நடைபெற்ற திருமண வைபவத்தில் மறுபடியும் தீர்க்கதரிசனமாக ஒரு ஜாதி மக்களை உங்களுக்கு தந்து ஆசீர்வதிப்பேன் என்று நாங்கள் கண்ட தரிசனத்தின் மக்களையும் உறுதிப்படுத்தி எங்களை ஆசீர்வதித்தார். "ஒவ்வொரு மனிதனுடைய வெற்றிக்குப் பின்னால் அவனது மனைவி இருப்பாள்" என்பது உலகப் பழமொழி, அதேபோல் குடும்பத்தைப் பராமரிப்பதிலும் ஜெபித்து ஆலோசனைகளை வழங்குவதிலும், ஊழியப் பொறுப்புகளில் பங்கு வகிப்பதிலும் தேவன் சகல கிருபைகளையும் எனது மனைவிக்குத் தந்து, மூன்று பிள்ளைகளையும் கொடுத்து குடும்பத்தை ஆசீர்வதித்தபடியால் தேவனைத் துதிக்கிறேன்.


திருமணத்தின் போது

தேவன் தரிசனத்தில் காட்டிய அதே பீல் மக்கள் மத்தியிலே மிஷனெரியாகச் சென்று பணித்தளத்தையும் மக்கள் கூட்டத்தையும் ஆய்வு செய்து ஊழியத்தை ஆரம்பிக்க ஆயத்தமா என்று கேட்டார். தேவனுடைய அழைப்பையும் தரிசனத்தையும் உறுதிப்படுத்தி, 5வருடங்கள் குஜராத் துதியா என்ற பணித்தளத்தை கிறிஸ்தவர்களே இல்லாத லிம்கேடா தாலுகாவில் கண்டுபிடித்து நான்கு ஆலயங்களையும் 5 சுதேச ஊழியர்களையும் சுமார் 1000 ஆத்துமாக்களையும் தேவனண்டை வழிநடத்தவும் தேவன் கிருபை செய்தார். அவருக்கே மகிமை உண்டாவதாக.

தேவனுடைய தீர்மானத்தை நிறைவேற்றும் ஊழிய அழைப்பு 1990ம் ஆண்டு ஜுலை மாதம் சுமார் 1 கோடி பீல் மக்களை தேவனண்டை நடத்துவதற்கான சிறப்பான தேவ திட்டத்தையும் நடத்துதலையும் தேவன் எங்களுக்குக் கொடுத்தார். இருவருமாக ஜெபித்து இதுவரை தேவன் எங்களைக் கொண்டு உருவாக்கின சபைகள், ஊழியர்கள், ஆத்துமாக்கள் அனைத்து உடைமைகள் எல்லாவற்றையும் ஒன்றையும் இச்சிக்காமல் IMS–ல் ஒப்படைத்து விட்டோம். சுவிசேஷம் அறிவிக்கப்படாத வேதனை நிறைந்த அதே பீல் மக்கள் மத்தியில் அடுத்த தாலுகாவான ஜாலோத்தை பணித்தளமாகத் தீர்மானித்து ஊழியங்களை ஆரம்பிக்கத் திட்டமிட்டோம்.

ஆனால் 6 மாதங்கள் டெல்லியில் உள்ள **EFFICOR** ஸ்தாபனத்தின் மூலமாக, சமூக பொருளாதார முன்னேற்றத் திட்டங்களுக்கான சிறப்புப் பயிற்சியை இருவரும் பெறவும், எங்களைத் தாங்கி ஆதரிக்கவும் அதன் டைரக்டர் திரு. **C.B.** சாமுவேல் அவர்கள் எங்களை ஊக்கப்படுத்தி, உதவியும் செய்தார்கள்.

தேவனுடைய பெரிதான கிருபையால் **Shalom** ஊழியத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எங்கள் வாழ்வில் **FMPB,IMS, EFFICOR** ஸ்தாபனங்கள் மூலமாக எங்களுக்கு 10 வருடங்கள் ஊழியப் பயிற்சி அனுபவங்கள் கிடைத்தன. இந்த ஸ்தாபனங்களுக்காகவும் இந்த ஸ்தாபனத்திலுள்ள தலைவர்கள் மூத்த அண்ணன்மார்கள் ஒவ்வொருவருக்காகவும் தேவனைத் துதிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் அவர்களுக்கு நன்றி நிறைந்த வாழ்த்துக்களைக் கூறுகிறேன்.

எங்களது அர்ப்பணம் பசிபிக் கடல் உள்ள தீவுகளில் வாழும் மனிதர்களையே கொன்று சாப்பிடுகிற ஆதிவாசி மக்கள் மத்தியில் ஊழியம் செய்த ஜாண் மிஷனெரி, சொற்ப வருடங்கள் வாழ்ந்து ஆண்டவருக்காய் ஆயிரமாயிரம் ஆத்துமாக்களை சொந்தமாக்கின உன்னத மிஷனெரியாவார். அவர் கல்லறையில் எழுதப்பட்ட வாசகம் **"When This Missionary Landed Here There Is No Christian. But When He Died, There Is No Heathens"** இந்த மிஷனெரி இந்தத் தீவில் நுழைந்த போது ஒரு கிறிஸ்தவரும் கிடையாது. ஆனால் அவர் இறந்தபோது ஒரு புறஜாதி மனிதரும் கிடையாது. அதாவது அனைவரும் தேவ பிள்ளைகளாய் மாறிவிட்டார்கள். இதை வாசித்த நானும் என் மனைவியும், எங்கள் வாழ்நாட்கள் முடிவதற்குள் அனைத்து பீல் ஆதிவாசி மக்களும் இயேசுவை ஏற்றுக் கொள்ள வேண்டும், 7 ஆயிரம் பீல் கிராமங்களிலும் சபைகள் உருவாக வேண்டும் என்று அர்ப்பணித்து ஊழியம் செய்து வருகிறோம்.

# அர்ப்பணித்தேன் என்னையே...



சகோதரி. வஹிதா தேவதாஸ்

தேவன் என்னைத் தெரிந்தெடுத்து, பயன்படுத்தி வருகிறார் என்றால், உண்மையிலேயே அது அவருடைய அநாதி தீர்மானமாகும். நான் 15–3–1963 அன்று தூத்துக்குடியைச் சேர்ந்த திரு. அருள்ராஜ் – திருமதி. கிரேஸ் தம்பதியருக்கு மூத்த மகளாகப் பிறந்தேன். நாசரேத்தைச் சேர்ந்த எனது பாட்டியம்மா (அம்மாவின் அம்மா) மார்த்தாள் மோசஸ் அவர்கள் நான் பிறப்பதற்கு முன்பாக உன் பெயர் எப்சிபா (கர்த்தர் உன்மேல் பிரியமாயிருப்பார்) என்றும், இவள் ஊழியம் செய்வாள் என்றும் தேவன் வெளிப்படுத்தினதாக எனது தாயாரிடமும், என்னிடமும் கூறுவார்கள். அது மட்டுமல்லாமல், நான் நாசரேத் ஊருக்குச் செல்லும் பொழுதெல்லாம் மர்காஷிஸ், ராக்லெண்டு, மிஷனெரிகளின் வாழ்க்கை சரித்திரங்களைச் சொல்லி மிஷனெரி தாகத்தை ஏற்படுத்தினார்கள். இளம் பருவத்திலிருந்தே நான் இயேசு கிறிஸ்துவை அதிகமாய் நேசிக்கின்ற இருதயத்தை கிருபையாய் பெற்றிருந்தேன். மேலும் பாடல்களின் மூலம் தேவனைத் துதிப்பதில் அதிக மகிழ்ச்சியடைவதுண்டு.

1976–ம் ஆண்டு நாகர்கோவில் கொட்டாரம் என்ற இடத்தில் நடைபெற்ற வாலிபப் பெண்கள் முகாமில் பங்கெடுத்தேன். சந்தியா வேளையில் இயேசு கிறிஸ்துவின் முகத்தை தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றேன். என்னையும் அறியாமல் தேம்பித் தேம்பி அழுது இரட்சிப்பைப் பெற்றேன். "கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?" சங். 27:1 இந்த வசனத்தின் மூலம் தேவன் என்னோடு பேசி என்னைப் பெலப்படுத்தினார். அந்த நேரமே என்னை ஊழியத்திற்கென்று அர்ப்பணித்தேன்.

அந்த வருடத்தில் ஆறுமுகநேரி C.S.I. திருச்சபையின் மூலம் V.B.S.. Directors பயிற்சிக்கு அனுப்பப்பட்டேன். பயிற்சியிலிருந்து வந்த பின்பு எனது பொறுப்பில் கொடுக்கப்பட்ட 300 சிறு பிள்ளைகளைப் பார்த்த பொழுது என் உள்ளம் ஆத்தும பாரத்தினால் நிறைந்தது. 10 நாட்களுக்குள் பிள்ளைகள் அனைவரையும் இரட்சிப்புக்குள் வழிநடத்த வேண்டும் என்ற வாஞ்சையுடனும், ஜெபத்துடனும் செயல்பட ஆரம்பித்தேன். தேவன் என் வாஞ்சையையும் ஜெபத்தையும் கேட்டருளினார். பின்பு நான் அதிகமாய் ஆத்துமப் பாரத்தினால் நிரப்பப்பட்டேன்.

உடனே ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சையிருந்த போதிலும் பெற்றோரின் விருப்பப்படியே கல்லூரி படிப்பிற்குச் சென்றேன். ஆனாலும் விடுமுறை நாட்களில் YFC (Youth for Christ) - ல் Youth Camp - களில் Volunteer ஆகச் சென்று உதவி ஊழியம் செய்தேன். ஆனாலும் எனது சரீரத்தில் அடிக்கடி இழுப்பு வியாதியினால் அதிகம் கஷ்டப்படுவேன். திடீரென்று ஒரு நாள்

வியாதி அதிகரிக்கவே, மிகவும் பெலவீனப்பட்டு தினமும் இரண்டு ஊசிகள் போடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அந்த நாட்களில் எனது தாயாரும் எனக்கு வியாதியிலிருந்து விடுதலை கிடைத்தால் ஊழியத்திற்கு அனுப்புவேன் என்று பொருத்தனையோடு ஜெபித்தார்கள். இரண்டு நாட்கள் மருத்துவமனைக்குச் சென்றேன். ஆனால் அன்று இரவு காயல்பட்டணத்தில் சகோ. மோகன். சி. லாசரஸ் அவர்கள் கூட்டம் நடைபெற்றது. மிகவும் வேதனையோடு பங்குபெற்றேன். அன்று சகோதரர் ஜெபிக்கும் போது தேவன் எனக்கு அற்புதமான சுகத்தைக் கொடுத்தார். அன்றோடு என்னுடைய சரீர வியாதியிலிருந்து விடுதலைப் பெற்றேன். எனக்கு ஜீவன், சுகம், பெலன் தந்த தேவனுக்காக வாழ என்னை அர்ப்பணம் செய்தேன்.

திடீரென்று எனது தகப்பனார் வியாதிப் படுக்கையில் விழுந்தபடியால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக, நான் வேலை பார்த்தால்தான் குடும்பத்தை நடத்த முடியும் என்ற சூழ்நிலை நேரிட்டது. நான் Telephone, Wireless Operator Course முடித்திருந்தபடியால் அந்த வேலை கிடைக்கும்படியாய் எனது தாயார் அதிக முயற்சி எடுத்தார்கள். இதற்கிடையில் மிஷனெரியாக ஒடிஸா செல்லும்படியாக ஆலோசனை, சபை போதகரான **Rev.** காந்தி செல்வின் அவர்கள் மூலம் கிடைத்தது. உடனே ஆதிவாசி மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய என்னை அர்ப்பணித்தேன். எனது பெற்றோரும் கண்ணீரோடு என்னை அர்ப்பணித்தார்கள். நான் இந்திய மிஷனெரி சங்கத்தில் (IMS) சேர்ந்து பயிற்சிக்குச் சென்ற மூன்றாவது நாளில் எனக்கு Telephone Operator வேலைக்கான Order கிடைத்தது. ஒரு பக்கம் ஊழியம், மறு பக்கம் உலக வேலை, எதைத் தெரிந்தெடுப்பது? உலகத்திலேயே மிகவும் உன்னதமான பணியாகிய ஊழியத்தையே செய்வதாக முடிவெடுத்து, உலக வேலைக்கான Order –யை அந்த இடத்திலேயே கிழித்து எறிந்துவிட்டு என்னை ஊழியத்திற்கென்று முழுமையாக அர்ப்பணித்தேன்.

**1983–ல்** IMS –மூலம் ஒடிஸா மாநிலத்தில் மல்க்கன்கிரி என்ற பணித்தளத்தில் மிஷனெரியாக சென்று **2** ஆண்டுகள் பணிப்புரிந்தேன். போண்டா, கோயா மற்றும் சந்தா இனமக்கள் மத்தியில் கிராம ஊழியத்திற்கு வாரந்தோறும் சைக்கிளில் சென்று ஊழியம் செய்ய கிருபை செய்தார். மட்டுமல்லாமல் மல்க்கன்கிரி பணித்தளத்தில் உள்ள ஆதிவாசி சிறுவர்களுக்கு இயேசுவைப் பற்றி போதிக்கும் கிருபையை பெற்றிருந்தேன். நான் எதிர்காலத்திலும் தேவனுக்காக ஊழியம் செய்து கர்த்தருக்கு மகிமையாய் வாழவேண்டும் என்று பாரத்துடன் ஜெபித்து வந்தேன். என் ஜெபத்தையும் கர்த்தர் கேட்டார்.

**1985–ம்** ஆண்டு ஜுலை **8–ம்** தேதி FMPB –ல் பீஹாரில் மிஷனெரியாக பணியாற்றிக் கொண்டிருந்த சகோ. தேவதாஸ் அவர்களோடு திருமணம் நடந்தது. ஆதிவாசிகள் மத்தியில் ஊழியம் செய்ய அர்ப்பணித்திருந்த எங்கள் இருவரையும் தேவன் இணைத்தது நிச்சயமாகவே தேவனுடைய அநாதி திட்டமாகும். எங்களை அழைத்தவர் கடந்த **30** வருடங்கள் எங்கள் வாழ்க்கையிலும், பீல் மக்கள் ஊழியப்பாதையிலும் உண்மையுள்ளவராயிருக்கிறார். தேவன் எங்களுக்கு மூன்று பிள்ளைகளைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். டைட்டஸ் & மெர்லின், பேரன் Zion Kryston, M.A., (Media) படித்துக் கொண்டிருக்கும் ஷாலோம், ரஷ்யாவில் மருத்துவம் **6**ம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கும் ஷெக்கினா ஆகியோருக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.



# பீல் ஆதிவாசி மக்களின் கலாச்சாரம்

**அமைவிடம் & மக்கள் தொகை** நமது பாரத தேசத்தில் வாழ்ந்து வரும் சுமார் 580 வகையான 10 கோடி ஆதிவாசிகளில், 3வது அதிகமாய் உள்ளவர்கள் பீல் ஆதிவாசிகள் ஆகும். இவர்கள் அதிகமாக குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் மற்றும் மஹாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் பரவலாக சுமார் 1 கோடி பீல் மக்கள் இருக்கிறார்கள்.


பஜாரில் விற்பனை செய்யப்படும் வில் அம்புகள்

**வில் அம்புகள்** "பீல்" என்ற வார்த்தை திராவிட மொழியிலிருந்து மருவிய சொல்லாகிய "வில்" என்னும் பொருள் கொண்டது. ஒவ்வொரு பீல் குடும்பத்தினரும் வில், அம்பு, வாள் இவைகளை வேட்டையாடுவதற்கல்ல, திருடவும், கொள்ளையிடவும், சண்டையிடவும் தங்களை பாதுகாத்துக் கொள்ளவும் வைத்திருக்கிறார்கள். இவர்கள் வில் அம்புகளை எடுத்துக் கொண்டு குழுவாகச் சென்று கொள்ளையடிப்பவர்கள்.


குடும்பமாக சாராயத்தைக் காய்ச்சிக் குடிக்கும் பீல் ஆதிவாசிகள்

**உணவு** பீல் ஆதிவாசிகள் சிறு கிராமங்களிலும் மலைப்பாங்கான குன்றுகளிலும், சிறிய குடிசைகள் அமைத்து அதைச் சுற்றிலும் உள்ள தங்கள் நிலத்தில் மக்காச்சோளத்தைப் பயிரிடுகின்றனர். இவர்கள் மக்காச்சோள ரொட்டியை, எண்ணெய், உப்பு இல்லாமல் சுட்டு, காரமான இஞ்சி, மிளகாய், பூண்டுகளைச் சேர்த்து உண்பார்கள். இந்த பகுதியில் உள்ள "மௌவா" பூவைக் கொண்டு பெரும்பாலும் பெண்கள் தங்கள் வீடுகளிலும், ஆண்கள் நதியோரங்களிலும் சாராயத்தைக் காய்ச்சி ஆண்கள், சிறியவர்கள், மற்றும் பெண்களும் கூட பருகுவார்கள்.


கலாச்சார உடையில் பீல் ஆதிவாசி பெண்கள்

**உடையும், ஆபரணமும்** கொஞ்சம் முன்னேறின கிராமங்களில் உள்ள மக்கள் யாவரும் ஷால் ஒன்றைக் கட்டியிருப்பார்கள். ஆண்கள், தங்கள் தலையில் 5 மீட்டர் நீளமுள்ள தலைப்பாகைக் கட்டுவார்கள். ஆனால் மிகவும் உள்ளடங்கிய கிராமங்களில் வாழும் மக்கள் அரைகுறை ஆடையணிந்துதான் இருப்பார்கள். சிறு பிள்ளைகள் பெரும்பாலும் ஆடை அணியமாட்டார்கள். வெள்ளி நகை மீது அதிக விருப்பமுள்ளவர்கள்.

**மொழி** குஜராத்தில் உள்ள ஆதிவாசிகள் பிலோடி பாஷையையும், இராஜஸ்தானில் உள்ளவர்கள் வாகுடி என்ற பாஷையையும், மத்தியப்பிரதேசத்தில் உள்ளவர்கள் பீலி என்ற பாஷையையும் பேசுகிறார்கள். இந்த பாஷைகளுக்கு எழுத்து வடிவம் கிடையாது.


சிறு வயது திருமணம்

**இறைவழிபாடு & திருமணம்** ஆதிவாசிகள் இறந்தவர்களின் ஆவிகளை வணங்குபவர்கள். மந்திரவாதிகளை தெய்வமாய் மதிப்பதால் மந்திரவாதிகள் கூறுகிறபடி ஆடு, கோழி இவைகளைப் பலியிடுவதால் வீட்டிற்கு வீடு பிசாசின் கிரியைகள் காணப்படுவதோடு, பில்லிசூனியம் செய்தும் வருகிறார்கள். மேலும் இந்த ஜனங்களின் மத்தியில் பால்ய வயது திருமணங்கள் அதிகளவில் நடைபெறுகின்றன.

**சமூக பொருளாதார நிலை** பீல் ஆதிவாசிகள் மழையை நம்பி வாழ்பவர்கள் மழையில்லை என்றால் விவசாயம் கிடையாது. கூலி வேலை செய்ய நகர்ப்புறங்களுக்குச் சென்றால் அதிலும் சரியான கூலி கிடைக்காமல் ஏமாற்றப்படுவார்கள். இவர்கள் மிக அத்தியாவசியமான தேவையின்போது வட்டிக்குப் பணம் வாங்கி வாழ்நாள் முழுவதும் வட்டி கட்டுவார்கள்.

**கல்வி** பள்ளிக்கூட வசதி கிராமங்களில் அதிகம் இல்லாததால் கல்வி அறிவு மிகவும் குறைவாக உள்ளது. அப்படியே சில இடங்களில் பள்ளிகள் இருந்தாலும் சரியானபடி கல்வி கற்றுக் கொடுப்பதில்லை. மேலும் உள்ளடங்கிய பெரும்பாலான கிராமங்களில் உள்ள திருடர்கள் மற்றும் குடிகாரர்களின் நிமித்தமாக பயந்து அங்குள்ள பள்ளிக் கூடங்களுக்கு ஆசிரியர்கள் ஒழுங்காக வருவது கிடையாது. கிராமங்களில் ஆசிரியர்கள் சரியாக மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்காததால் பீல் மக்களுக்கு எழுத, வாசிக்க, எண்ணவும் தெரியாது.



நோய் தீர மந்திரவாதிகளிடம் சூடு வாங்கும் ஜனங்கள்

**மருத்துவம்** பீல் ஆதிவாசிகள் வாழும் பெரும்பாலான கிராமங்களில் மருத்துவ வசதி கிடையாது. கர்ப்பிணி பெண்கள் மற்றும் பிறந்த குழந்தைகளுக்குத் தேவையான மருத்துவ உதவி, தடுப்பு ஊசிகள் போன்ற காரியங்கள் கிடைப்பதில்லை. நகர்புறத்திற்கு ஆதிவாசிகள் மருத்துவ சிகிச்சைக்கு வந்தால் அதிகமாக செலவாகின்றபடியால், பெரும்பாலானோர் வியாதியினைத் தாங்கிக் கொண்டு வேதனைப்படுவார்கள். மேலும் வியாதியிலிருந்து விடுதலைபெற மந்திரவாதிகளை அணுகி பூஜை செய்து மந்திர கயிறு, தாயத்துக்களை அணிந்து, ஆடு, கோழிகளை வெட்டி பரிகாரம் தேடுவார்கள்.



ஜீப்பில் மீது பயணம் செய்யும் பீல் ஆதிவாசிகள்

**போக்கு வரத்து** பெரும்பாலான கிராமங்களுக்கு போக்குவரத்து வசதிகள் கிடையாது. பல கிலோ மீட்டர் தூரம் நடந்தேதான் வருவார்கள். ஆங்காங்கே கிடைக்கும் ஜீப், ஆட்டோ, டெம்போக்களில் ஏறி ஊர்களுக்கு வருவார்கள். ஒரு ஆட்டோவில் குறைந்தது 15பேர், ஜீப்பில் 50 பேர்களாகத் தொற்றிக் கொண்டு பயமின்றி பயணம் செய்வார்கள்.

**மின் வசதி** பீல் மக்கள் வசிக்கும் அதிகமான கிராமங்களில் மின்சார வசதி கிடையாது. பல கிராமங்களில் திருட்டுத்தனமாக நேரடியாக மின்சாரத்தை எடுத்துப் பயன்படுத்துவார்கள். 660க்கும் அதிகமான நமது சபைகளில், 480 சபைகளில் மின்சார வசதி கிடையாது.

**குடிநீர் வசதி** பல நூற்றுக்கணக்கான கிராமங்களில் பரந்து வாழும் பீல் ஆதிவாசி ஜனங்களுக்கு நல்ல குடிநீர் வசதி கிடையாது. ஆழ் குழாய் குடிநீர் வசதி இருந்தாலும் அதிக தூரமாக இருக்கும். மேலும் பல ஆழ் குழாய் கிணறுகளில் தண்ணீர் பெரும்பாலான நாட்கள் வராது. கோடை காலங்களில் வெகு தூரம் நடந்து சென்று நதி ஓரங்களில் குழியைத் தோண்டி அதில் வரும் தண்ணீரை குடிக்க பயன்படுத்துவார்கள்



அழுக்குக் குட்டையில் இருந்து குடிக்க தண்ணீர் எடுக்கும் பெண்

இந்த பீல் ஆதிவாசி மக்கள் வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாமல் உலக அறிவு அற்றவர்களாக வாழ்ந்து வருகிறார்கள். மற்ற ஜனங்களினால் புறக்கணிக்கப்பட்ட ஜனங்களாகவும், மந்திரவாதிகள், அசுத்த ஆவிகள், பில்லி சூனிய பிடிகளில் சிக்கித் தவித்து வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் அநேகர் ஒருமுறைகூட இயேசு கிறிஸ்துவின் நாமத்தை கேள்விப்படாதவர்களாக இன்றைக்கும் பல கிராமங்களில் வசித்து வருகிறார்கள்.

## மறக்க முடியாத ஆரம்ப நாட்கள்...

**1–7–1991** அன்று தான் குஜராத் மாநிலத்தில் ஜாலோத் ஊருக்கு வந்து முதன்முதலாக ஷாலோம் ஊழியப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அற்பமான அந்த நாளுக்கு முன்பாக நாங்கள் தேவனால் உருவாக்கப்பட்ட நாட்கள் மறக்க இயலாதவையாகும்.

**1982 – 1985** வரை IMS ஸ்தாபனத்தில் பீஹார், உத்திரப்பிரதேசம், ஹரியானா மாநிலங்களில் ஊழியம் செய்த பின்பு, **1985 – 1990** வரை ஐந்து ஆண்டுகள் இந்திய மிஷனெரி சங்கத்துடன் இணைந்து பீல் மக்கள் தரிசன பணியை நிறைவேற்றிய பின்பு, ஆவியானவர் தந்த தரிசனத்தின் படியும், வழிநடத்துதலின்படியும் IMS ஸ்தாபனத்திலிருந்து எங்களை விடுவித்தபோது அனைத்து சபைகள், ஊழியங்கள், ஆத்துமாக்கள் மற்றும் அனைத்து தளவாடங்கள், உடைமைகள் முதலான ஒன்றையும் இச்சிக்காத வண்ணம் ஒப்புக் கொடுத்து வந்தோம். ஊழியர்களையும் ஆத்துமாக்களையும் பிரித்து விடாதபடி இறுதிவரை தேவனுக்காக IMS –ல் இருக்கும்படி ஆலோசனை கூறினோம். அடுத்த தாலுகாவான ஜாலோத் சென்று ஊழியம் ஆரம்பிக்க திட்டமிட்டோம்.

அந்த நாட்களில் என் மனைவிக்கு பிரசவகாலம் நெருங்கினபடியால் பிரசவகாலத்திற்குப் பின்பு, முன் பணி செய்த துதியா ஊரை விட்டு வெளியேற வாக்களித்தோம். ஒரே ஒரு அமர்சிங் என்ற 8வது வரை படித்த பையனை வீட்டு வேலைக்கு உதவி செய்ய அனுமதியுடன் வைத்திருந்தோம். தேவனிடத்தில் நீண்ட நாட்களாக ஆசையுடன் ஜெபித்த பெண்குழந்தை "ஷாரோனை" தேவன் தந்தார். மிகவும் அழகான குட்டிப்பாப்பா ஷாரோனைக் கண்டு என் பையன்கள் டைட்டஸ், ஷாலோம் அதிக மகிழ்ச்சியுற்றார்கள்.



சில தினங்களுக்குப் பின்பு (24–6–1991 அன்று) குழந்தை சுகவீனப்பட்டது. மருத்துவ வசதி சரியாக இல்லை. பரோடாவுக்கு கொண்டு செல்ல மருத்துவர் கூறினார். கைகளில் பணமும் இல்லை என்ன செய்வதென்று தாகோத் என்ற ஊரின் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருக்கும் போது "ஷாரோன்" எங்களை விட்டுப் பிரிந்து விட்டதை அறிந்தோம். சுமார் 100 வருடங்களுக்கு முன்பு IP Mission மூலம் வந்த மிஷனெரிகளின் கல்லறைக்கு அருகில் அவளை நல்லடக்கம் செய்தோம். டைட்டஸ், ஷாலோம் "ஷாரோன் பாப்பா எங்கே?" என வினவினார்கள். கர்த்தர் கொடுத்தார். கர்த்தர் எடுத்தார் அவருக்கே ஸ்தோத்திரம் என்று சொன்னோம். பிஞ்சு உள்ளங்களை தேவன் தேற்றினார். தமிழில் ஆறுதல் கூறயாருமே இல்லை. தேவனே எங்களையும் தேற்றினார்.



பேய்வீடு என்று அழைக்கப்பட்ட வீடு

இந்நிலையில் வீடு கிடைக்கவில்லை. ஜாலோத் நகரத்தில் இறுதியாக "பேய்வீடு" என்று அழைக்கப்பட்ட

வீடு ரூ. 625/– க்கு மாத வாடகையில் கிடைத்தது. ஆனால் அது பல வருடங்களாக ஆலயமாக இருந்தது. கிறிஸ்தவர்கள் இல்லாதபடியால் ரூ. 2000க்கு விற்கப்பட்டு குடியிருப்பாக மாறினது. அங்கு குடியேறிப்போனவர்கள் பலர் மரித்து விடுவதால் "பேய் பங்களா" என்று அழைத்தார்கள்.

1–7–1991 அன்று பிள்ளைகளுடன் ஜாலோத் ஊரில் கிடைத்த வீட்டில் ஜெபித்து உள்ளே சென்றோம். ஷாரோன் மரித்த வேதனை ஒரு புறம் இருந்தது. தனிமையும், பணக் கஷ்டமும் மறுபுறம். சில தினங்களுக்குப் பின் நாங்கள் ஜெபித்துக் கொண்டிருக்கும்போது ஆண்டவர் இயேசு எங்கள் அறையில் பிரசன்னமானார். "ஷாரோனைக் குறித்து கலங்க வேண்டாம். என்னிடத்தில் இருக்கிறாள். கோதுமை மணி இந்த நிலத்தில் விழுந்தபடியால் ஆயிரமாயிரம் குடும்பங்களை உங்களுக்குத் தருவேன். அற்புத அடையாளங்கள் மூலமாக என்னை பீல் மக்களுக்கு வெளிப்படுத்துவேன்" என்று இயேசு கூறினார். அவ்வளவுதான்! எங்கள் துக்கங்கள் மாறின! ஆண்டவர் சொன்னபடி வெள்ளிக்கிழமை கூட்டம் ஆரம்பித்தோம்.

முதல் வாரக் கூட்டத்தில் ராம்சிங் பாய் என்ற சாராயம் காய்ச்சும் குடும்பமும் சவ்ஜி பாய் என்ற மந்திரவாதி குடும்பமும் ஜெபிப்பதற்காக வந்தார்கள். தேவன் இவர்களுக்குள் இருந்த 21 வருட பிசாசின் கட்டுகளிலிருந்தும் நோய்களிலிருந்தும் விடுதலை செய்தார். அதைத் தொடர்ந்து இவர்கள் கூறின சாட்சி மூலமாக, அடுத்த வாரம் 20 பேர்கள் வந்தார்கள். குருடர்கள் பார்வையடைந்தார்கள். செவிடர்கள் கேட்டார்கள். வியாதியஸ்தர்கள் சொஸ்தமடைந்தார்கள். பிசாசு பிடியினின்றும் பாவத்தின் பிடியினின்றும் அநேகர் விடுதலை பெற்றார்கள். அதைத் தொடர்ந்து 50, 60 பேர் ஒவ்வொரு வாரமும் பங்கெடுக்க ஆரம்பித்தார்கள்.


பேய்கள் துரத்தப்படுகின்றன


குருடர்கள் பார்வையடைகின்றனர்

நான்கு மாதங்கள் கழிந்தது சகோ. G.P.S. ராபின்சன் அவர்கள் பணித்தளத்திற்கு வந்து சிறப்புக் கூட்டங்களை நடத்தினார்கள். முதல் கூட்டத்தில் சுமார் 85 பேர் பங்கு பெற்றார்கள். அநேக அற்புதங்கள் நடைபெற்றன. இரவு வீட்டில் நடைபெற்ற கூட்டத்தில் சுதேச ஊழியர்கள், விசுவாசிகள் குறிப்பாக என் மனைவி வஹிதாவும் பரிசுத்த ஆவியினால் அபரிவிதமாய் நிரப்பப்பட்டார்கள்.

சுதேச ஊழியர்களையும் தேவன் பயன்படுத்த ஆரம்பித்தார். 14 கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் உருவாயின. முதன் முறையாக கிறிஸ்துமஸ் மேளா (1991) நடத்தினோம். இயேசு பிறப்பின் நற்செய்தியை முதன் முறையாக 300 பேர்கள் அறிந்துக் கொண்டு, முதல் உண்மையான கிறிஸ்துமஸ் பண்டிகையை ஆசரித்தார்கள். 1992 ஜுலை (1வருடத்தில்) 7 சுதேச ஊழியர்கள் ஒப்புக் கொடுத்தார்கள். 12 மாதங்களில் சுமார் 500 பேர் ஆண்டவரை ஏற்றுக் கொண்டார்கள். தொடர்ந்து வந்த ஆண்டுகளில் தேவன் தந்த வளர்ச்சியைக் கண்டு பிரமித்தோம். திரியேக தேவனுக்கே மகிமை செலுத்துகிறோம்.

# பீல் சுதேச ஊழியர்கள்

1991–ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஆவியானவரின் வழி நடத்துதலின்படி, குஜராத் ஜாலோத் ஊரில் பேய் பங்களா என்று அழைக்கப்பட்ட மிஷன் இல்லத்தில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. தேவன் தரிசனத்தில் கூறியபடி, வெள்ளிக்கிழமை தோறும் உபவாச ஜெபக் கூடுகை நடத்த ஆரம்பித்தோம். மற்ற நாட்களில் 20 கி.மீ சுற்றளவில் உள்ள கிராமங்களுக்கு சைக்கிளிலும், ஜீப், டெம்போ, பேருந்து மற்றும் லாரிகளிலும் ஏறி தூர இடங்களுக்கு நற்செய்தி அறிவிக்கவும், கூட்டங்கள் நடத்தவும் செல்லுவதுண்டு. தேவகிருபையால், வெள்ளிக்கிழமை கூடுகையில் 2 குடும்பத்திலிருந்து சுமார் 500 பேர்கள் வரை பங்கெடுத்தார்கள். சுமார் 100 கி.மீ தொலைவிலி–ருந்தும் நற்செய்தியைப் பற்றி ஜனங்கள் கேள்விப்பட்டு ஜெபக்கூட்டத்தில் வந்து அற்புத அடையாளங்களையும், அற்புத சுகத்தையும், பிசாசின் பிடியிலிருந்து விடுதலையையும் பெற்றார்கள். இப்படியே பெரிய அளவில் பீல் மக்கள் தேவனை ஏற்றுக் கொள்ளுவார்கள் என நாங்கள் விசுவாசித்தோம்.

பரிசுத்த ஆவியானவர் மிகத் தெளிவாக ஷாலோம் ஊழியத்திற்கு, முழு பீல் இனமக்கள் இரட்சிப்பின் திட்டத்திற்கு, பீல் ஆதிவாசி ஊழியர்கள் எழுப்பப்பட வேண்டும் என்ற பாரம் கொடுத்தார். தமிழ்நாட்டிலிருந்து சுவிசேஷ பணிக்காக ஊழியர்களை அனுப்ப வேண்டாம் என்று திட்டமாகப் பேசினார். கல்வியறிவு இல்லாத, சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட மக்கள் மத்தியிலிருந்து ஒன்று, இரண்டு என 1992ம் ஆண்டில் 7 சுதேச ஊழியர்களை குடும்பமாக தெரிந்தெடுத்தோம். அந்த சிறிய வீட்டில் 1 மாதம், 2மாதங்கள் தங்க வைத்து நானும் என் மனைவி வஹிதாவும் வேகமான பயிற்சியையும், பரிசுத்த ஆவியானவர் அபிஷேகத்தையும், சுவிசேஷப் பாரத்தையும் அறிவித்தோம்.

"...என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்." (யோவான் 14:–12) என்ற இயேசுவின் வாக்கின்படி, தேவன் சுதேச ஊழியர்களைப் பயன்படுத்த ஆரம்பித்தார். அப்போஸ்தலர் காலத்தில் நடந்த அற்புதங்களை தேவன் இவர்களைக் கொண்டு நடத்தினார், குருடர்கள் பார்வையடைந்தார்கள், முடவர்கள் நடந்தார்கள், பிசாசின் கட்டுகளிலிருந்தும், பில்லிசூனியக் கட்டுகளிலிருந்தும் தேவன் அநேகரை விடுவித்தார். மரித்தவர்களும் உயிரோடு எழும்பும் அற்புதங்களையும் தேவன் நடத்தினார். 1993 முதல் 2000 வருடம் வரை, இந்தியா கேம்பஸ் குருசேட் மூலமாக, சுமார் 20 இயேசு திரைப்பட குழுக்கள் மூலமாக சுமார் 1000 கிராமங்களில் ஒரு லட்சத்திற்கும் அதிகமானோருக்கு இத்திரைப்படம் மூலம் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது.

குஜராத்தில் ஜாலோத் பகுதியிலிருந்து ஊழியம் அடுத்தடுத்த கிராமங்களிலும், தாலுகாக்களிலும் பரவியது. குறிப்பாக தாகோத் தாலுகாவிலும், பாரேவா மாவட்டத்திற்கு மிக அருகில் உள்ள மத்தியப்பிரதேசம் ஜாபூவா, அலிராஜ்பூர், ரத்லம், சோட்டா உதய்பூர் மாவட்டங்களுக்கும் இராஜஸ்தானிலுள்ள பான்ஸ்வாடா மாவட்டத்திற்கும் சுவிசேஷம் சென்றது.

இன்று தேவ கிருபையால் 580க்கும் அதிகமான சுதேச ஊழியர்கள் எழுப்பப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையோடு அற்புத அடையாளங்கள் மூலமாக 660க்கும் அதிகமான கிராம சபைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இதுவரை 25 ஆயிரம் பீல் ஆதிவாசி குடும்பத்தினர்களுக்கும் மேலாக இயேசுவை ஏற்றுக் கொண்டுள்ளனர். தேவனுக்கே மகிமை!

சுதேச ஊழியரின் சாட்சி

# போதகர். பால் முனியா

மத்தியப்பிரதேசம்



என்னுடைய பெயர் பால்முனியா. நான் மத்தியப்பிரதேசம், ஜாபுவா மாவட்டத்தில் உள்ள கூட்டாயா என்ற கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. என்னுடைய கிராமம் மிகவும் உள்ளடங்கிய பகுதி. மக்கள் எப்பொழுதும் சாராயம் குடித்து ஒருவரோடொருவர் சண்டையிட்டு திருடுவார்கள். எனது அம்மா மற்றும் எனது மகன் இருவரும் நோய்வாய்ப்பட்டு, அதிக பணம் செலவு செய்தும் சுகம் கிடைக்காமல், மந்திரவாதிகளை நாடிச் சென்று 6 ஆடுகள், 15 கோழிகள், வெட்டி பலி கொடுத்தும் பலனில்லாமல் நிம்மதியின்றி வாழ்ந்து வந்தோம்.

இந்த நிலையில் எனது கிராமத்திற்கு பக்கத்திலுள்ள அந்தர்வேலியாவில் இயேசு கிறிஸ்துவின் கூட்டம் நடைபெறுகிறது என அறிந்து அங்கு அழைத்துச் செல்லவே, சுதேச ஊழியர் என்னுடைய அம்மாவிற்காகவும், எனது மகனுக்காகவும் ஜெபித்தவுடன் தேவன் பூரண சுகம் கொடுத்தார். அன்று முதல் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டோம்.

ஒரு கிராம ஆரம்பப் பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்து வந்த நான் இந்த உலக வேலையை விட்டு உன்னதரின் சேவை செய்ய வாஞ்சித்தேன். தேவன் என்னை இரட்சித்து, தமது ஆவியினால் அபிஷேகித்தார். எனது குடும்பத்தில் எழும்பிய பலவித எதிர்ப்புகள் மத்தியிலும் இயேசுவுக்கு சாட்சியாக ஊழியம் செய்ய ஒப்புக் கொடுத்தேன். தேவனுடைய கிருபையால் கடினமான ஊழியம் செய்து, நல்தி, கேய்டாவத், முண்டத் ஆகிய 3 கிராமங்களிலும் சபைகளை உருவாக்கி சுமார் 200 விசுவாசக் குடும்பங்களை தேவணண்டையில் நடத்தி வருகிறேன்.

தேவகிருபையால், வேதாகமக் கல்வியை Correspondence Course மூலமாக படித்து, B.Th. பட்டம் பெற்றேன். 2009ம் ஆண்டு நவம்பர் மாதம் போதகராக அபிஷேகம் பெற்று, மத்தியப்பிரதேசம் ஜாபுவா மாவட்ட ஷாலோம் ஊழியர்களுக்கு ஒருங்கிணைப்பாளராக பணியாற்றி, பொறுப்பாக ஊழியங்களை நடத்தி வருகிறேன். எனது தரிசனமெல்லாம் ஜாபுவா மாவட்டத்தில் உள்ள 1400 கிராமங்களிலும் ஊழியர்களும் சபைகளும் எழும்ப வேண்டும் என்பதே. எனது மனைவி மங்கிபேன் மற்றும் பிள்ளைகள் காலேப், லீலா, ஆகியோருக்காக ஜெபியுங்கள்.


போதகர். பால் முனியா அவர்கள் மூலம் எழுப்பப்பட்ட திருச்சபையும் அதன் விசுவாசிகளும்.

**மாதந்தோறும் ரூ. 2500 ஜெபித்து கொடுத்துத் தாங்கக் கூடிய 500 மிஷனெரி ஆதரவாளர்கள் எழும்ப ஜெபித்துத் தாங்க முன் வாருங்கள். பாரத தேசமெங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்திப் பணியாளரை அனுப்புவோம்.**


580 பீல் சுதேச ஊழியர்கள் குடும்ப முகாம்

# ஷாலோம் பணித்தளங்களில் கட்டப்பட்டுள்ள கிராம ஆலயங்களில் சில



கோய்க்கா பேராலயம், இராஜஸ்தான்



பாடிலசோடி கிராம ஆலயம், இராஜஸ்தான்



டும்மட் கிராம ஆலயம், இராஜஸ்தான்



கர்வாணி கிராம ஆலயம், குஜராத்



பாரேவா கிராம ஆலயம், குஜராத்



பாட்டன்புரா கிராம ஆலயம், குஜராத்



காளாகேத் கிராம ஆலயம், மத்தியப்பிரதேசம்



ரூப்பாகேடா கிராம ஆலயம், மத்தியப்பிரதேசம்



பரோடு கிராம ஆலயம், மத்தியப்பிரதேசம்

**இந்த 2015 ஆம் ஆண்டிற்குள் பணித்தளங்களில் 100 கிராம ஆலயங்கள் கட்டியெழுப்பப்பட ஜெபியுங்கள்**



# எழுந்து கட்டுவோம் வாருங்கள்

தேவனுடைய பெரிதான கிருபையினால் இதுவரை சுமார் 1 இலட்சத்திற்கும் அதிகமான ஆத்துமாக்கள் இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு திருச்சபையில் சேர்ந்துள்ளார்கள். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து திருமுழுக்குப் பெற்றவர்கள் வாரந்தோறும் 660 கிராமங்களில் கூடி ஆராதிக்கிறார்கள். இதுவரை 303 கிராம ஆலயங்கள் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. 20.11.2009 அன்று தேவக் கிருபையால் திருச்சபைகள் திருமண்டலமாக (Shalom Diocese In India) உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தேவனுக்கே மகிமை!

## செய்யவேண்டிய வேலையோ மிகப் பெரியது

தேவக் கிருபையால் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட 580 க்கும் அதிகமான நம் பீல் சுதேச மிஷனெரிகள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டவர்களாய் நற்செய்தியை அறிவித்து பாவங்கள், சாபங்கள் நோய்களிலிருந்து மக்கள் திரளாக கிராமம் கிராமங்களாய் இயேசுவைச் சொந்த இரட்சகராய் ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்று வருகிறார்கள். 660 க்கும் அதிகமான கிராமங்களில் சபைகள் கூடி ஆராதனை நடைபெற்று வருகிறது. இந்த வருடத்தில் குறைந்தது 100 கிராமங்களில் ஆலயங்களைக் கட்ட திறந்த வாசல்களையும், வாய்ப்புகளையும் தேவன் தந்துள்ளார்.

மேலும் 7000 கிராமங்களில் வாழும் பீல் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க விசேஷ அபிஷேகம் பெற்ற 48 சுதேச ஊழியர்கள் 12 குழுக்களாக மாதந்தோறும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை 48 கிராமங்களில் நடத்துகிற நற்செய்திக் கூட்டங்கள் மூலமாக தேவன் பல அற்புத அடையாளங்களை நடத்தி வருகிறார். அதன் மூலமாக ஒவ்வொரு மாதமும் பல நூறு குடும்பங்கள் தேவனை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

25 குடும்பங்கள் ஆண்டவரை ஏற்றுக்கொண்ட பின்பு 7 மூப்பர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. சுதேச ஊழியர் தன்னுடைய நிலத்தை ஆலயம் கட்டுவதற்குக் கொடுக்க முன் வருகிறார்கள். குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் 30 x 18, 40 x 20, 50 x 20 அளவுகளில் முறையே 2 இலட்சங்கள், 3 இலட்சங்கள் 5 இலட்சங்கள் நிதி உதவி கொடுத்து ஆலயம் கட்டித் தரும் ஆதரவாளர்கள் தேவை. நீங்கள் சபையாக, குழுவாக, குடும்பமாகக் கட்டிக் கொடுக்க முன் வாருங்கள்.



பணித்தளங்களில் கட்டப்பட்டுவரும் கிராம ஆலயங்களில் ஒரு சில





**2016 ஆம் வருடத்தில் (வெள்ளி விழா ஆண்டில்) 250 கிராம ஆலயங்களைக் கட்டி எழுப்ப**

ரூ. 5 இலட்சங்கள் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 50 பேர்கள்

ரூ. 3 இலட்சங்கள் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 100 பேர்கள்

ரூ. 2 இலட்சங்கள் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 100 பேர்கள்

*அல்லது* **ரூ. 1 இலட்சம், ரூ. 50,000 ரூ. 20,000, ரூ. 10,000**

நிதி உதவிகளைத் தரும் ஆதரவாளர்களாக இணைந்து
பணித்தளங்களில் ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க முன் வாருங்கள்

- **உங்கள் சபையின் சார்பிலோ, உங்கள் குடும்பத்தின் சார்பிலோ ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.**
- **மேலும் உங்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு இந்த மிஷனெரி ஊழியத்தினை அறிமுகம் செய்து ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.**

**ரூ. 5 இலட்சங்கள், ரூ. 3 இலட்சங்கள், ரூ. 2 இலட்சங்கள் மற்றும் ரூ. 1 இலட்சம்** கொடுக்கக்கூடிய ஆதரவாளர்களுக்கு தனி கிராம ஆலயம் கொடுக்கப்பட்டு, ஆலய பிரதிஷ்டை DVD மற்றும் புகைப்படங்கள், அறிக்கை அனுப்பி வைக்கப்படும்.
மற்ற நிதியாளர்களுக்கு இணைந்து கட்டப்பட்ட ஆலயத்தின் படங்கள், DVD மற்றும் அறிக்கைகள் அனுப்பி வைக்கப்படும்.

நிதி உதவி அனுப்பும் போது **Sharing Love Mission** என்ற பெயருக்கு (Tuticorin Branch) D.D. or Cheque எடுத்து ஷாலோம் கிராம ஆலய கட்டுமானப் பணிக்கான சிறப்பு நிதி என்று குறிப்பிட்டு அனுப்பி வைக்கலாம்.
மேலும் எங்கள் அலுவலகம், முன்னேற்றப் பணியாளர்கள், பிரதிநிதிகளிடம் கொடுத்து ரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கு | : | SHARING LOVE MISSION (Tuticorin Branch) |
| TMB வங்கிக் கணக்கு எண் | : | 106100710400009 (I F S Code : TMBL0000106) |
| Axis வங்கிக் கணக்கு எண் | : | 105010100094373 (IFS Code : UTIB0000105) |
| ICICI வங்கிக் கணக்கு எண் | : | 613901112799 (IFS Code : ICIC0006139) |



# ஷாலோம் திருச்சபை வளர்ச்சிப் பணிகள்

## சுதேச ஊழியர்களுக்கான மாத கூடுகை

ஒவ்வொரு மாதமும் மூன்று மாநிலங்களில் ஊழியம் செய்து வரும் அனைத்து ஊழியர்களுக்கான சிறப்புக் கூடுகை மாதத்தின் ஒவ்வொரு முதல் வாரத்திலும் நடைபெறுகிறது. இந்த கூடுகைகள் குஜராத், மத்தியப்பிரதேசம். இராஜஸ்தான் I, இராஜஸ்தான் II என 4 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு நான்கு நாட்கள் நடைபெறுகின்றன. அனைத்து சுதேச ஊழியர்களின் மாதக் கூடுகையின் போது, ஒவ்வொரு ஊழியரும் ஊழிய மாத அறிக்கை, சபை தசமபாக காணிக்கை, திருமண்டலக் காணிக்கை போன்றவற்றை சமர்ப்பித்து தங்களுக்கான ஆதரவுத் தொகையையும் பெற்றுக் கொண்டு செல்வார்கள்.

## மூப்பர்களுக்கான சிறப்பு முகாம்கள்

ஒவ்வொரு சபையிலும் சொந்த பீல் மக்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற பாரத்துடன் கூடிய 7 மூப்பர்களைத் தெரிந்தெடுத்து வருடந்தோறும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. இதுவரை சுமார் 4050 மூப்பர்கள் உருவாக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் சபையைக் கண்காணித்து, ஜெப ஊழியம் மற்றும் விசுவாசிகளின் வீடு சந்திப்பு, போதகருடைய பணியில் இணைந்து செயல்படுதல், ஆத்தும ஆதாயம் செய்தல், காணிக்கை சேகரித்தல், போன்ற பணிகள் மூலமாக திருச்சபையைக் கட்டி எழுப்பி வருகிறார்கள்.

## பெண்களுக்கான எழுப்புதல் கூட்டங்கள்

சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்களின் தலைமையில் மூத்த சுதேச ஊழியர்களின் மனைவியர்கள் 100 பேர்களுக்கான கூடுகை ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் நடைபெறுகிறது. அதுபோல மூத்த சுதேச ஊழியர்களின் மனைவியர்கள் மூலம் 3 மாநிலங்களிலும் உள்ள 660 சபைகளிலும் பெண்கள் கூட்டம் வருடந்தோறும் தவறாமல் நடைபெறுகிறது. அந்தந்த பிராந்தியங்களில் சுதேச ஊழியர்களின் மனைவியர்கள் கூடி உபவாச ஜெபங்களை ஏறெடுத்து வருகிறார்கள். மேலும் ஒவ்வொரு சபைகளிலும் குறைந்தது 10 பெண்களாக தெரிந்தெடுக்கப்பட்டு, சுமார் 25 பிராந்தியங்களில் பெண்களுக்கான சிறப்பு எழுப்புதல் கூட்டங்கள் வருடந்தோறும் நடத்தப்படுகின்றன. அதில் தேவன் அற்புத அடையாளங்களுடன், அபிஷேகத்தினால் அனைத்து பெண்களையும் நிரப்புகிறார்.

## புதிய சுதேச ஊழியர்களுக்கான சிறப்புப் பயிற்சி

சபைகள் வளர்ந்து, ஆத்துமாக்கள் பெருகும் போது புதிய ஊழியர்களை மூத்த ஊழியர்கள் எழுப்புகிறார்கள். 30, 30 ஊழியர்கள் தெரிந்தெடுக்கப்படும்போது, அவர்கள் குடும்பங்களுக்கான 3 நாட்கள் சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது. அவ்வேளையில் பாவம், சாபம், நோய்கள் ஆகியவற்றி–லிருந்து விடுவிக்கப்பட்டவர்களாய் புது ஜீவனைப் பெறுகிறார்கள். இப்படியாக ஊழிய அழைப்புப் பெற்றவர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும், தேவனுடைய தரிசனத்தையும், ஆத்துமப் பாரத்தையும் பெறுகிறார்கள். அதன் பின்பு ஊழியர்கள் மட்டும் 1 மாத சிறப்பு வேதாகமப் பயிற்சி பெற்று தங்கள் சொந்தக் கிராமத்தில் சுவிசேஷம் அறிவித்து திருச்சபையைக் கட்டுகிறார்கள்.

## ஷாலோம் அற்புதத்தின் நாள்

ஆவியானவரின் வழி நடத்துதலின்படி, ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதம் 4–ஆவது வெள்ளிக்கிழமை ஷாலோம் அற்புதத்தின் நாளாக அனைத்து சபைகளிலும் கொண்டாடுவார்கள். விசுவாசிகள், மூப்பர்கள் அந்த ஒரே நாளில் குறிப்பாக, கடந்த ஆண்டில் சுமார் 4020 அற்புதங்களை இயேசுவின் நாமத்தில் கண்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

## ஷாலோம் மிஷன் ஞாயிறு

தேவகிருபையால், ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதத்தில் ஷாலோம் மிஷன் ஞாயிறு என்று ஷாலோம் ஊழிய ஆரம்ப நாளை நினைவு கூர்ந்து, பீல் மக்கள் தரிசனத்தை தேவன் நிறைவேற்ற அர்ப்பணித்து அனைத்து ஷாலோம் சபைகளில் ஊழியர், மூப்பர்கள், விசுவாசிகள் ஆகியோர் தேவனைத் துதித்து அர்ப்பணித்து ஜெபிப்பார்கள்.

## வாலிபர் முகாம்

ஜனவரி மாதத்தில் தேவன் கொடுத்த தரிசனத்தின்படி வாலிபர்களுக்கென்று விசேஷித்த முகாம்கள் "உண்மை நண்பன் இயேசு" என்ற தலைப்பின் கீழ் 7 இடங்களில் நடத்தப்பட்டதில் 1627 வாலிப சகோதர, சகோதரிகள் பங்குபெற்றார்கள். இதன் கருப்பொருளுக்கு ஏற்ப விசேஷித்த பாடல்கள் மற்றும் குறுநாடகங்கள், குழு ஆலோசனை வேளை, ஜெபவேளை நடத்தப்பட்டன. இந்த முகாம்களை சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் நடத்தினார்கள்.

## சிறுவர்கள் முகாம்

3 மாநிலங்களிலுமுள்ள வாலிபர்கள் மற்றும் சிறுவர்களுக்கான சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. சுமார் 3000 வாலிபர்களும், பள்ளியில் பயிலும் மாணவர்கள் 5000 பேர்களும் இதன் மூலமாக இயேசுவை ஏற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறுகிறார்கள். பாடல்கள், ஆராதனை, குறுநாடகம், Puppet Show, குழு ஆலோசனை, சிறப்புச் செய்தி, ஐக்கிய உணவு வேளை, அர்ப்பணிப்பின் நேரம் என இவைகளைக் கொண்டு சிறப்பாக இந்த முகாம்கள் நடத்தப்படுகின்றன.

தேவகிருபையால் அனைத்து கிராம சபைகளிலும் ஞாயிறு பள்ளி ஆசிரியர்களுக்கான சிறப்புப் பயிற்சி கொடுக்கப்பட்டு, 52 வாரங்களுக்கான பாடங்களும் வரையறுக்கப்பட்டு நடத்தப்படுவதால், விசுவாச சிறுவர்கள் வசனத்தில் பலப்பட்டு வருகிறார்கள்.

## சுதேச ஊழியர் குடும்ப முகாம்

தேவகிருபையால், ஒவ்வொரு வருடமும் , 3 மாநிலங்களிலும் உள்ள பீல் சுதேச ஊழியர்கள் குடும்பங்களுக்கான சிறப்பு எழுப்புதல் தரிசன முகாம்கள் பெரும்பாலும் நவம்பர் மாதத்தில் நடைபெறுகிறது. இந்தக் கூடுகையில், அனைத்து ஊழியர்களும் தங்கள் கிராமங்களிலிருந்து புறப்பட்டு வந்து, குஜராத்தில் "ஆனந்த்" என்ற பட்டணத்தில், பெராக்கா சென்டரில் வைத்து நடைபெறும் 3 நாட்கள் முகாமில் மிக சந்தோஷமாகவும் ஆர்வமாகவும் கூடுவார்கள். சகோ. மோகன் சி. லாசரஸ் (இயேசு விடுவிக்கிறார்) அவர்கள் சிறப்பு செய்திகளை வழங்கி, அனைத்து ஊழியர்களையும் புதிய அபிஷேகத்தில் வழி நடத்துவார்கள். மட்டுமன்றி, அவர்கள் சிறப்பு செய்தியாளராக போதகர்களை அழைப்பதுண்டு. ஒவ்வொரு ஊழியரும் விடுதலையுடன் புதிய அபிஷேகம் பெற்று, தேவ தரிசனத்துடன் புறப்பட்டுச் செல்வார்கள்.


மத்தியப்பிரதேசம், நல்தி கிராம ஆலயத்திற்கு முன்பாக

# வெளிச்சத்தைக் கண்ட பீல் மக்கள்

## சகோ. மோகன் சி. லாசரஸ்

இயேசு நல்லவர். அவர் ஜனங்களை நேசிக்கிற ஒரு ஆண்டவர். இராஜஸ்தான், குஜராத், மத்தியப்பிரதேசம் இந்த மூன்று மாநிலத்திலும் பீல் என்கிற ஆதிவாசி மக்கள் சுமார் 1 கோடி மக்கள் இருக்கிறார்கள். இவர்கள் சுபாவத்தின்படி பயங்கரமான குணமுள்ளவர்கள். வில், அம்புகளை வைத்து இன்றைக்கும் சண்டையிடும் பழக்கமுடையவர்கள். சில கிராமங்களில் திருடுவதுதான் அவர்களுடைய பரம்பரை தொழிலாகும். போலீஸ் கூட இவர்களுடைய கிராமங்களுக்கு வர பயப்படுவார்கள். சாராயம் காய்ச்சுவது, குடிப்பது, வெறிப்பது, மனம்போல் வாழ்வது அதுதான் அவர்களுடைய வாழ்க்கை. அவர்கள் ஆவி வணக்கம் உள்ளவர்களாய்க் காணப்பட்டார்கள். அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டு தங்களுடைய வாழ்க்கையில் அடிமைத்தனத்திலும், வேதனையிலும் வாழ்ந்தவர்கள். ஒவ்வொரு கிராமத்திலும் மந்திரவாதிகளே அந்த மக்களை அடிமைப்படுத்தி அவர்கள் வாழ்க்கையை தங்கள் ஆளுகைக்குள் வைத்திருந்தார்கள்.

இயேசு கிறிஸ்துவின் இந்த சுவிசேஷத்தை அன்பு சகோ. தேவதாஸ் அவர்களும் அவர்கள் மனைவி வஹிதா தேவதாஸ் அவர்களும் இந்த கிராமங்களுக்குக் கொண்டு வந்தபடியால் இருளில் இருந்த இந்த மக்கள் இன்றைக்கு வெளிச்சத்தைக் கண்டிருக்கிறார்கள். திருடுவதையும் கொள்ளையடிப்பதையும் தொழிலாகக் கொண்ட ஏராளமான மக்கள் இரட்சிக்கப்பட்டு, ஆண்டவருடைய பிள்ளைகளாய் மாறியிருக்கிறார்கள். இன்றைக்கு இந்த மக்கள் இரட்சிக்கப்பட்டு இயேசுவின் பிள்ளைகளாய் மாறி, இருளிலிருந்து வெளிச்சத்தைக் கண்டு மகிழ்ந்திருப்பதை பார்க்கும் போது உள்ளம் மகிழ்ச்சியடைகிறது. சாராயம் காய்ச்சி விற்பதும் குடிப்பதுமே தொழிலாய் கொண்டிருந்த மக்கள் இன்றைக்கு அதையெல்லாம் விட்டு விட்டு பரிசுத்த வாழ்க்கை வாழ்கிறதை பார்க்க முடிகிறது. இயேசு கிறிஸ்து என்கிற சுவிசேஷம் இந்த மக்களுடைய வாழ்க்கையை மாற்றியிருக்கிறது.

அவர்களின் ஊழியத்தின் விளைவாக இன்றைக்கு ஏராளமான மக்கள் இரட்சிக்கப்பட்டு தேவனுடைய பிள்ளைகளாய் மாறியிருக்கிறார்கள். ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள். 660க்கும் மேற்பட்ட சபைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. 1994ஆம் ஆண்டில் முதன் முதலாக ஷாலோம் மிஷனெரி ஊழியத்தின் மூலமாக இவர்கள் மத்தியில் ஊழியத்திற்காக நான் கடந்து வந்தேன். அப்பொழுது இந்த மக்கள் மீது ஆண்டவர் வைத்திருந்த விசேஷித்த அன்பை என்னால் பார்க்க முடிந்தது.

ஆகவே ஆண்டவர் இந்த மக்களுக்காக விசேஷமாக ஜெபிக்கவும், இவர்கள் மத்தியிலே நடக்கிற ஊழியத்தைத் தாங்கவும் எனக்குள்ளே விசேஷமான பாரத்தை உண்டாக்கினார். இவர்கள் மத்தியிலே ஊழியத்திற்கு வரும்பொழுதெல்லாம் என் உள்ளம் அதிகமாய் மகிழ்ச்சியடைகிறது.

இந்த முறையும் குஜராத்திலே வயல்வெளியிலும், மத்தியப்பிரதேசத்தில் வனாந்திரத்திலும் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. தமிழ்நாட்டைப் போல இங்கு விளம்பரங்கள் கிடையாது, நோட்டீஸ் கிடையாது, ஒரு அறிவிப்பும் கிடையாது. இருக்கிற சபைகளில் மாத்திரம் இப்படிப்பட்ட ஒரு கூட்டம் நடக்கப்போகிறது என்று சொல்லப்பட்டது. எத்திசையிலும் இருந்து ஆயிரம் ஆயிரமாக மக்கள் வந்து கூடிவிட்டனர். 7 மைல், 8 மைல், 10 மைல் தூரம் அவர்கள் வசனத்தைக் கேட்க தாகத்துடன் நடந்தே வந்ததைக் கண்டபோது என் உள்ளம் இந்த மக்களுக்காக அதிக பாரம் கொண்டது. எவ்வளவு தாகத்தோடு ஆண்டவருடைய வசனத்திற்குக் காத்திருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து தங்களுடைய வாழ்க்கையிலும் அற்புதம் செய்ய வேண்டும் என்று எவ்வளவு தாகத்தோடு இந்த மக்கள் தேடி வருகிறார்கள். அவர்கள் தாகத்தையும், ஆண்டவருடைய வசனத்திற்குக் கீழ்ப்படிகிறதையும் பார்க்கும்போது என் உள்ளம் மகிழ்ச்சியடைகிறது. இயேசு கிறிஸ்து இந்த மக்களை விசேஷமாய் நேசிக்கிறார்.

ஆகவே இந்த மக்கள் ஆராதிப்பதற்கு ஆலயங்களைக் கட்ட வேண்டுமென்று ஆண்டவர் கட்டளையிட்டார். 200, 300 பேர் கூடி மரத்தடியில் வெயிலில் உட்கார்ந்து தவறாமல் ஆண்டவரை ஆராதித்தார்கள். இன்றைக்கு அவர்களுக்கு ஆலயங்கள் கட்டப்படும்பொழுது அவர்கள் உள்ளம் எவ்வளவு மகிழ்ச்சியடைகிறது. இன்றைக்கு அவர்களுக்கு கட்டப்பட்ட ஒரு புதிய ஆலயத்திற்கு முன்பாக நின்று உங்களோடு நான் பேசுகிறேன். இந்த ஆலயப் பிரதிஷ்டையில் பங்கு பெற்று அவர்களுக்கு ஆண்டவருடைய வசனத்தைச் சொல்லி ஜெபித்தது என் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு நாள்.

இந்த ஏழை ஜனங்கள் இயேசுவின் மேல் வைத்திருக்கிற அன்பையும், விசுவாசத்தையும் கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன். இந்த ஜனங்கள் மூலமாக பலத்த ஒரு காரியத்தை ஆண்டவர் செய்வார் என்று நான் விசுவாசிக்கிறேன். இவர்களுடைய முழு மக்களும் ஆண்டவரை அறிந்து கொள்ளவும், இவர்கள் மூலமாய் இந்தியத் தேசத்திலே ஒரு பெரிய எழுப்புதல் உண்டாகவும் இவர்களை தேவன் இந்தியாவின் வடபகுதியிலே வல்லமையோடு பயன் படுத்துவார் என்று நான் விசுவாசிக்கிறேன்.

ஆண்டவர் இந்த ஜனத்தை தெரிந்து கொண்டிருக்கிறபடியால் இவர்கள் இந்த தேசத்திற்கு ஆசீர்வாதமாய் மாறுவார்கள் என்று விசுவாசிக்கிறேன். அதற்காக இந்த மக்களுக்காக கருத்தாக நாம் ஜெபிக்க வேண்டும். ஜெபிக்கிறது மாத்திரமல்ல இந்த மக்கள் இன்னும் ஆண்டவருடைய அன்பிலே வளருவதற்கும் இந்த ஏழை மக்கள் இன்னும் ஆண்டவருக்குள் நிலைத்து நிற்பதற்கும் அவர்களுக்காக ஏதாவது நாம் செய்ய வேண்டும். ஆலயங்களைக் கட்டிக் கொடுக்கலாம். அவர்கள் சமுதாயத்திலே உயர்ந்த நிலைக்கு வருவதற்கு பல விதங்களிலே உதவி செய்யலாம். நாம் சேர்ந்து செயல்படுவோம். தேவனுடைய இராஜ்ஜியத்தைக் கட்டுவோம். **பரலோகம் மகிழ்ந்து களிகூறும்!**

**பரலோகத்திலே உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். ஆமென்!**

# ஷாலோம் திருமண்டலம் துவக்கவிழா - 20.11.2009










**Allahabad Bible Seminary - ல் B.T.S., (Bachelor of Theological Studies)**
**படித்து முடித்து பட்டம் பெற்ற நமது ஷாலோம் பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்கள்**







## ஷாலோம் ஊழியங்கள் நடைபெறும் பிராந்தியங்களுக்காக கருத்தாய் ஜெபியுங்கள்.



| மாநிலம் | மாவட்டம் | ஊழியம் நடைபெறும் தாலுகாக்கள் |
|---|---|---|
| குஜராத் | தாகோத் | தாகோத், ஜாலோத் பத்தேபூரா, லிம்கேடா கர்பாடா, தான்பூர், பாரியா |
| | பரோடா | சோட்டா உதய்பூர், கவாண்ட் |
| மத்தியப்பிரதேசம் | அலிராஜ்பூர் | பாபரா, ஜோபட் அலிராஜ்பூர், உதய்கட் |
| | படுவாணி | ராண்பூர், படுவாணி, |
| | ரத்லம் | பாஜ்னா |
| | தார் | தார் |
| | ஜாபுவா | ஜாபுவா, மேக்நகர் தாந்தலா, ராணாப்பூர் பேட்லாவத் |
| | சத்தர்பூர் | ராயி, பிஜாவர் |
| இராஜஸ்தான் | பான்ஸ்வாடா | குசல்கட், பாகிதோரா காட்டோல், கடி பான்ஸ்வாடா, |
| | உதய்பூர் | கேர்வாடா |
| | பிரதாப்கட் | பிரதாப்கட் |
| | டுங்கர்பூர் | டுங்கர்பூர் |

"நான் மோசேக்குச் சொன்னபடி உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன்". (யோசுவா 1 :3)

# ஷாலோம் சேரிட்டி மிஷன்

## SHALOM CHARITY MISSION

ஷாலோம் சேரிட்டி மிஷன் என்ற இயக்கம் பதிவு செய்யப்பட்டு சமுதாய முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. **Sharing Love Mission** சுவிசேஷப் பணி மற்றும் சபை காரியங்களை மட்டும் கவனித்து செயல்படும். **Shalom Charity Mission** – மற்ற சமுதாய முன்னேற்ற பணிகளையும், குழந்தைகளின் கல்விப் பணிகளையும் கருத்தாகத் திட்டமிட்டு, நிதிகளை சேகரித்து திறம்பட செயல்படும்.

### 1. ஷாலோம் மாணவர் விடுதிகள் (Shalom Hostel Projects)



குஜராத்தில் 260 மாணவர்களும், மத்தியப்பிரதேசத்தில் 368 மாணவர்களும், இராஜஸ்தானில் 620 மாணவர்களும் ஆக மொத்தம் 1248 பிள்ளைகளை நாம் தாங்கி வருகிறோம். பிள்ளைகள் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள்.

### 2. ஷாலோம் பள்ளி (Shalom School) Project



கடந்த 11 வருடங்களாக பிஜல்பூரில் (இராஜஸ்தான்) நமது பள்ளி பணியை தேவன் ஆசீர்வதித்து வருகிறார். இங்கு 8–ஆம் வகுப்பு வரை உள்ளது. ஆசிரியர்கள் நன்கு அர்ப்பணிப்போடு தங்கள் பணியைச் செய்து வருவதால் இதில் பயிலும் சுமார் 325 பிள்ளைகளும் படிப்பு, விளையாட்டு, ஒழுக்கம், வேத அறிவு போன்றவற்றில் முன்னேறி வருகிறார்கள். இவர்களுக்கு ஞாயிறு பள்ளியும், ஒழுங்காக தினமும் காலையில் வேதபாட தியானமும் நடைபெற்று வருகிறது. வருடத்திற்கு ஒரு முறை இந்த பிள்ளைகளுக்கு முகாம்களும் நடத்தப்படுகிறது.

### 3. ஷாலோம் பீல் ஆதிவாசி மாணவர் உயிர்கல்வித் திட்டம்

இந்த உயர்கல்வித் திட்டத்தின் மூலம் 180க்கும் அதிகமான மாணவர்கள் பொறியியல், மருத்துவம், ஆசிரியர் பயிற்சி, செவியர் பயிற்சி, கணிணி பயிற்சி மற்றும் B.Sc., B.A., போன்ற பட்டப்படிப்புகள் படித்து வருகின்றனர். இவர்கள் ஒவ்வொரு வருடமும் இவர்களின் கல்விக்கு ஏற்றவாறு ரூ. 10,000/– ரூ. 20,000/– ரூ. 30,000/– என வழங்கப்பட்டு தாங்கப்படுகிறார்கள்.



### 4. Child Development Centre (CDC) Project

'Compassion India' மூலமாக நாம் நடத்தி வரும் CDC - யில் CDC - Hirola (Guj) – ல் 248 பிள்ளைகளும், CDC - Jeri (Guj) – ல் 198 பிள்ளைகளும் CDC - Anthervelia (MP) - ல் 282 பிள்ளைகளும் ஆக மொத்தம் 728 பிள்ளைகள் கல்வி பயின்று வருகிறார்கள். இவர்களுக்கு உணவு, உடை, டியூசன் மற்றும் எல்லா வசதிகளும் கொடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருடமும் இந்த பிள்ளைகள் சுற்றுலா பயணத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அவர்களுக்கு முகாம்கள் நடத்தப்பட்டுவருகின்றன. அவர்களுக்கு இசைப் பயிற்சி, ஆவிக்குரிய பயிற்சி, தையல் பயிற்சி அனைத்தும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. CDC Jeri பிள்ளைகளுக்கு (Personality Development Training) ஆளுமை வளர்ச்சிப் பயிற்சியும் கொடுக்கப்படுகிறது.

மத்தியப்பிரதேசத்திலுள்ள மற்ற ஸ்தாபனங்களைச் சேர்ந்த CDC Project –ல் உள்ள அனைத்து பிள்ளைகளுக்கும் விளையாட்டுப் போட்டிகளும், பாட்டுப் போட்டிகளும் நடைபெற்று வருகின்றன. இதில் நமது ஷாலோம் பிள்ளைகள் விளையாட்டு மற்றும் பாட்டுப் போட்டிகளில் முதலாம் இரண்டாம் பரிசுகளை வென்று வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


### 5. Child Survival Programme (CSP) Project

'Compassion India' ஸ்தாபனத்துடன் இணைந்து நாம் நடத்தி வரும் CSP - Hirola (Guj) வில் 49 கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் 3 வயதுக்குட்பட்ட சிறு குழந்தைகளுக்கும், CSP - Anthervelia (MP) வில் 54 கர்ப்பிணி பெண்களுக்கும் 3 வயதுக்குட்பட்ட சிறு குழந்தைகளுக்கும், உடல் நலம் பேணும் பணி நடைபெற்று வருகிறது.

அதாவது கருவிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கவும், பராமரிக்கவும், நல்ல ஆரோக்கியத்துடன் வளர்க்கப்படவும், தடுப்பூசி மற்றும் சத்து மாத்திரைகளும், சத்துணவுகளும் இந்த சேவை மூலமாக வழங்கப்படுகின்றன. இந்த சேவை மூலம் கிராமங்களில் உள்ள விசுவாசி மற்றும் விசுவாசியல்லாத கர்ப்பிணிப் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் உதவி செய்து வருகிறோம்.

### 7. குடிநீர் வசதித் திட்டம் (Hand Pumps)

CBN ஸ்தாபனம் மூலமாக ஒவ்வொரு ஆண்டும், பீல் ஜனங்கள் வசிக்கும் இடங்களில் தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ள கிராமங்களில் ஆழ்குழாய் கிணறு போடப்பட்டு, கைப் பம்புகள் தரப்படுகின்றன. கடந்த ஆண்டில் மத்தியப் பிரதேசத்தில் வண்டிகள் கூட போக முடியாத உள்ளடங்கிய 25 கிராமங்களில் கர்த்தருடைய ஒத்தாசையினால் சிறந்த முறையில் ஆழ்குழாய் பம்புகள் போடப்பட்டன.





எல்லா இடங்களிலும் போதிய தண்ணீர் கிடைக்கப்பெற்று ஜனங்கள் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

**8. முதியோர் கல்வித் திட்டம் (ALP Project)**

"சேவா பாரத்" ஸ்தாபனத்துடன் இணைந்து முதியோர் கல்வித் திட்டம் (2011–2012) ல் மத்தியப் பிரதேசத்தில் 50 மையங்களிலும், குஜராத்தில் 10 மையங்களிலும் நடைபெற்றன.

**9. ஆரம்ப சுகாதார பயிற்சி (Medical Health Training)**

இதுவரை ஆரம்ப சுகாதார பயிற்சி சுமார் 500 ஊழியர் மற்றும் ஊழியக்காரிகளுக்கு ஆண்டுதோறும் சுமார் 70 பேர் வீதம் 5 நாட்கள் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. **Dr. Jolly Abel** தலைமையில் குழுவினர்களாக வந்து பயிற்சியளித்தார்கள்.

**10. மருத்துவ முகாம் & ஷேரன் நினைவு மருத்துவமனை**

ஒவ்வொரு ஆண்டும் பீல் கிராமங்களில் இலவச மருத்துவ முகாம் நடத்தப்படுகிறது. இம்முகாம்களின் மூலம் 1000க்கும் மேற்பட்ட மக்கள் பயனடைகிறார்கள். **Dr.Abel, Dr. Inbakumar, Dr. Jolly Abel** மற்றும் குழுவினர்கள் வந்து 5 நாட்களாக இந்த பணியினை நிறைவேற்றினார்கள். தேவனுடைய கிருபையினால் குஜராத்திலுள்ள தாகோத்தில் **Dr. Inbakumar,** தலைமையில் ஷேரன் நினைவு மருத்துவமனை 18.07.2013 அன்று ஆரம்பிக்கப்பட்டு மிகவும் சிறப்பாக இயங்கி வருகிறது.



ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனை


நோயாளிகளைப் பரிசோதிக்கும் Dr. இன்பக்குமார் அவர்கள்


ஆரம்ப சுகாதார பயிற்சி பெற்ற நமது பீல் சுதேச ஊழியர்கள் மற்றும் அவர்கள் மனைவிமார்கள்

மேலும் ஆதிவாசி மாணவர் ஆதரவுத் தொகை, உயர்கல்வி படிப்பிற்கான ஆதரவுத் தொகை, இலக்கியப் பணிக்கான ஆதரவுத் தொகை, மருத்துவப் பணிக்கான ஆதரவுத் தொகை மற்றும் இதர சமூக சேவை பணிகளுக்கு நிதி உதவி அனுப்புவோர் **Shalom Charity Mission** – என்ற பெயருக்கே **D.D. or Cheque or M.O.** மூலமாகவோ அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம். இந்தப் பெயரில் காணிக்கை அனுப்புவோருக்கு **80G** வரிவிலக்கு வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

| | |
|---|---|
| வங்கி கணக்கு | : **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கி கணக்கு எண் | : **105010100096779 - Tuticorin Branch (IFS Code : UTIB0000105)** |
| **TMB** வங்கி கணக்கு எண் | : **174100710400061 - Tuticorin Branch (IFS Code : TMBL0000174)** |

# பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதப்புத்தகங்கள்



**கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று - அப். 13:49.**

கைகளில் வில் அம்புகளை வைத்துக்கொண்டு திருடியும், கொள்ளையடித்தும் சாராயத்தைக் காய்ச்சி குடித்தும் கொண்டிருந்த பீல் மக்கள். மந்திரப் பூஜைகள் செய்து பிசாசின் பிடியிலும், அந்தகாரத்திலும் வாழ்ந்து வந்த பீல் மக்கள் மத்தியில் ஷாலோம் தரிசனப் பணிகளை தேவன் கொண்டு வந்தது மட்டுமல்ல, மகத்துவமான காரியங்களையும் செய்திருக்கிறார்.

கடந்த 24 ஆண்டுகளில் 580 பீல் சுதேச ஊழியர்களை எழுப்பவும் அவர்கள் மூலமாக 660 க்கும் மேற்பட்ட சபைகளை உருவாக்கவும் தேவன் கிருபை தந்துள்ளார். பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்று வருகிறார்கள்.

ஒவ்வொரு கிராம விசுவாசிகள் எங்களிடம் இந்த கறுப்புக் கலர் புத்தகம் என்னவென்று ஆவலாய் கேட்பார்கள். மேலும் எங்களுக்கு ஒன்று தாருங்கள் என கேட்டு வேதாகமத்தை வாங்கி பயபக்தியுடன் அரவணைத்து வைத்துக் கொள்வார்கள். அவர்களுக்கு இலவசமாக வேதாகமத்தைக் கொடுக்காமல் குறைந்த விலையாக ரூ. 50/—க்குக் கொடுத்து வருகிறோம்.




கடந்த ஆண்டு 6,000 க்கும் மேலானவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். அந்த விசுவாசக் குடும்பத்தார் ஆவலுடன் வேதப்புத்தகத்தைக் கேட்கவே அவர்களுக்கு வேதப்புத்தகம் வழங்கப்பட அநேகச் சபைகள் மற்றும் தேவப்பிள்ளைகளிடம் அறிவிப்பு கொடுத்தோம். கடந்த வருடம் தேவக்கிருபையினால் சுமார் 4,000 வேதப்புத்தகங்களை வாங்கி மிகக் குறைந்த விலையில் வழங்க தேவன் கிருபைத் தந்தார்.



இவ்வருடம் 25,000 வேதப்புத்தகங்கள் குஜராத்தி, ஹிந்தி மொழியில் வழங்கப்பட வேண்டும். ஒரு வேதப் புத்தகத்திற்கு ரூ. 150/— வீதம் 25,000 வேதப்புத்தகங்களுக்கு நிதி உதவி செய்ய ஆதரவாளர்கள் தேவை. கிராமங்களில் வாழும் பீல் ஆதிவாசி மக்களுக்கு வேதப்புத்தகம் வழங்க தேவ ஜனங்களாக, குடும்பமாக, சபையாக முன் வாருங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

# ஜெபக்குறிப்புகள்...



## பீல் மக்கள் இரட்சிப்பிற்காக...

- குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் சுமார் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் வாழ்கின்றனர், அவர்கள் அனைவரும் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

## பணித்தளங்களில் நடைபெற்று வரும் ஊழியங்களுக்காக...

- 660க்கும் அதிகமான சபைகளுக்காக, 303க்கும் அதிகமான ஆலயங்களில் நடைபெற்று வரும் ஆராதனை மற்றும் இதர ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.
- மூப்பர், பெண்கள், ஊழியர்கள் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.
- வாலிபர் மற்றும் சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் ஒய்வு நாள் பள்ளிகள், CBC ஊழியங்கள் சிறுவர் மற்றும் வாலிபர் முகாம்களுக்காக ஜெபியுங்கள்.
- வெள்ளிதோறும் நடைபெற்றும் அற்புத சுகமளிக்கும் கூட்டங்களுக்காக ஜெபியுங்கள்.

## பேராயர் தேவதாஸ் குடும்பத்திற்காக...

- பேராயர் தேவதாஸ் மற்றும் அவரது மனைவி சகோதரி வஹிதா தேவதாஸ் ஆகியோருக்காகவும், தேவன் அவர்களுக்கு முழு பீல் மக்களுடைய இரட்சிப்பின் பணியில் தம்முடைய திட்டங்களையும் தரிசனங்களையும் தரவும், அவற்றை செயல்படுத்த நல்ல ஞானத்தையும், சுக, பெலன், ஆரோக்கியத்தினை தரவும், போக்கையும் வரத்தையும் பாதுகாக்கவும் ஜெபியுங்கள்.
- Compassion Project மற்றும் Shalom Charity Mission ஆகியவற்றை நிர்வகிக்கும்படியாக பொறுப்பேற்றுள்ள சகோ. டைட்டஸ் மற்றும் மெர்லின் அவர்களையும், பேராயர் அவர்களின் பேரன் Zion Kryston க்காகவும், M.A. (Media) பயின்று வரும் சகோ. ஷாலோம் அவர்களையும் தேவன் ஆசீர்வதித்து உருவாக்க ஜெபியுங்கள்.
- ரஷ்யாவில் மருத்துவப் படிப்பு பயின்று வரும் சகோதரி ஷெக்கினா அவர்களை தேவன் ஆசீர்வதிக்கவும், படிப்பினை முடித்து பீல் மக்களுக்கு ஆசீர்வாதமாக தேவன் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

## ஷாலோம் ஊழியர்களுக்காக...

- 580 க்கும் அதிகமான பீல் சுதேச ஊழியர்களுக்காகவும் அவர்கள் குடும்பத்திற்காகவும், தேவன் அவர்களை வல்லமையாகப் பயன்படுத்தவும், அவர்கள் தேவைகள் சந்திக்கப்படவும், அவர்களது பிள்ளைகளின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.
- பீல் ஆதிவாசி சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் சுவிசேஷ ஊழியம், Compassion Project மற்றும் Training Unit –ல் பணிபுரியும் ஊழியர்களுக்காகவும், தேவன் அவர்களுக்கு நல்ல ஞானத்தையும், கிருபையையும் தந்து ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

◎ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்கள் பாதுகாவலுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

## ஷாலோம் சேரிட்டி மிஷன்...

◎ ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக நடைபெறும் பீல் ஆதிவாசி ஜனங்களின் கல்வி, மருத்துவம், குடிநீர் வசதிகளுக்காகவும், பொருளாதார முன்னேற்றப் பணிகளுக்காகவும், நம் ஊழியத்தை செய்கிற தேவ பிள்ளைகளின் ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

◎ ஷாலோம் விடுதிகளில் தங்கி பயின்றுவரும் 1248க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சிறுவர்களுக்காகவும், அவர்களை தேவன் ஆசீர்வதித்துப் பாதுகாக்கவும், நல்ல ஞானத்தையும், சுகம், பெலனையும் தேவன் சிறுவர்களுக்குக் கொடுக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

◎ Teacher Training, Engineering, Medical & ITI போன்ற உயர்கல்வி கற்கவிருக்கும் பிள்ளைகளுக்காகவும், அவர்களின் கல்வித் தேவைகளை தேவன் சந்திக்கவும் ஜெபியுங்கள்.

◎ எதிர்காலத்தில் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு தேவன் நல்ல வேலை வாய்ப்பினைத் தந்து சமுதாயத்தில் உயர்த்தி ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

## ஷாலோம் திருமண்டலத்திற்காக...

◎ ஷாலோம் திருமண்டலத்தின் கீழ் இயங்கி வரும் திருச்சபை பணிகளுக்காக, திருச்சபை ஒருங்கிணைப்பு பணிகளுக்காக ஜெபியுங்கள்.

◎ இதுவரை கட்டப்பட்டுள்ள 303 ஷாலோம் திருச்சபைகளுக்காக, திருச்சபைகள் வளர்ந்து பெருகவும் அநேக ஆத்துமாக்கள் திருச்சபைக்கு வரவும், திருச்சபையில் தேவன் அநேக அற்புத அடையாளங்கள் செய்யவும் ஜெபியுங்கள்.

◎ கட்டப்பட்டு வரும் கிராம ஆலயப் பணிகள் தடைகளின்றி நிறைவு பெறவும், ஆலயம் அவசியமாகத் தேவைப்படும் கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்படவும், அதற்கான ஆதரவாளர்கள் கிடைக்கப்பெறவும் ஜெபியுங்கள்.

## எதிர்காலத் திட்டங்களுக்காக...

◎ தேவனுக்கு சித்தமானால், 2016 க்குள், 1000 திருச்சபைகள் மற்றும் 1000 சுதேச ஊழியர்கள் எழுப்பப்படவும், 10 இலட்ச ஆத்துமாக்கள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

◎ 2016க்குள் 5000க்கும் அதிகமான சிறுவர்களுக்கு கல்வியறிவு கொடுக்கப்படவும் & அவர்களுக்கு உணவு உடை, உறைவிடம் கொடுத்து பராமரிக்கவும் ஜெபியுங்கள்

◎ ஊழியர்கள் கூட்டங்கள் மற்றும் இதர முகாம்களை நடத்த வசதியான Meeting Hall கட்டப்பட ஜெபியுங்கள்.

◎ ஆடியோ, வீடியோ படப்பிடிப்பு மற்றும் எடிட்டிங் பண்ணக்கூடிய சாதனங்கள் வாங்கப்படவும், வீடியோ ஆடியோ நிலையங்கள் உருவாக்கப்படவும் தேவையான நிதி உதவி மற்றும் அதற்கேற்ற ஊழியர்கள் கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.

# ஷாலோம் ஊழிய வெள்ளிவிழா ஆண்டு

## சிறப்பு பணிகளும் திட்டங்களும்


சுவிசேஷத்திற்கு செவிசாய்க்கும் பீல் ஆதிவாசி ஜனங்கள்

தேவ கிருபையால் ஆபிரகாமைப் போல் தேவன் ஒரே குடும்பமாக எங்களை **1991** ஜூலை மாதம் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் தரிசனம் தந்து அழைத்து சென்றார். இன்று **24** ஆண்டுகள் கர்த்தர் எங்களுடன் இருந்து அற்புத அடையாளங்களுடனும் அவருடைய சித்தப்படி **580** பீல் சுதேச ஊழியர்களையும், **660**க்கும் அதிகமான சபைகளையும்; **25,000**க்கும் அதிகமான விசுவாச குடும்பங்களையும் தந்துள்ளார். தேவனுக்கே மகிமை !

இந்த **25**ம் வெள்ளிவிழா ஆண்டில் அனைத்து பீல் சுதேச ஊழியர்கள் ஆளுக்கொரு புதிய சுதேச ஊழியர்களை எழுப்பவும்; ஒரு புதிய சபையை உருவாக்கவும்; ஒவ்வொரு சபையில் உள்ள விசுவாசி குடும்பங்கள் குறைந்தது **5** குடும்பங்களை இயேசுவண்டை வழி நடத்தவும் தீர்மானித்து ஜெபித்து செயல்பட எங்களுடன் அர்ப்பணித்து உள்ளார்கள். ஆகவே **25**ம் ஆண்டு முடிவடையும் போது **2016** இறுதிக்குள் **1000** பீல் சுதேச ஊழியர்கள்; **1000** கிராம சபைகள் மற்றும் ஒரு இலட்ச விசுவாச குடும்பங்களை தேவ நாம மகிமைப்பட பெற்றுக் கொள்வோம் என விசுவாசிக்கிறோம். ஆகவே இந்த ஆண்டின் ஊழியங்களுக்காக, சிறப்பு திட்டங்களுக்காக ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்.

### 2016ம் ஆண்டு இறுதிக்குள்


ஷாலோம் மூப்பர்கள் கூடுகை

- **400** புதிய பீல் சுதேச ஊழியர்களை எழுப்பவும், அவர்களுக்கு பயிற்சி கொடுத்து உருவாக்க வேண்டும்.
- **400** புதிய சபைகள் எழுப்பப்பட வேண்டும்.
- **250** புதிய ஆலயங்கள் கட்டப்பட வேண்டும்.
- **7000** மூப்பர்களுக்கான சிறப்பு அபிஷேக முகாம்கள் நடத்தப்பட வேண்டும். (பகுதிவாரியாக)
- **10.000** வாலிபர்களுக்கான சிறப்பு முகாம்கள் நடத்தப்பட வேண்டும். (பகுதிவாரியாக)
- **1000** சபைகளில் உள்ள ஆயிரக்கணக்கான சிறுவர்களுக்கு ஓய்வுநாள் பாடசாலை, சிறுவர் முகாம்கள், விடுமுறை வேதாகம பள்ளிக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.
- பெண்களுக்கான சிறப்பு அபிஷேக முகாம்கள் நடத்தப்பட வேண்டும்.
- பீல் மக்கள் இரட்சிப்புக்காகவும்; தேசத்தின் எழுப்புதலுக்காகவும் **24** மணி நேர ஷாலோம் ஜெப கோபுரம் மற்றும் ஜெப சேவை மையம் உருவாக்கப்பட வேண்டும்.
- குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் திருச்சபை ஒருங்கிணைப்பு பணிகளுக்கான சிறப்புப் பயிற்சி மற்றும் **3** திருமண்டலங்களை (Diocese) ஏற்படுத்தும் சிறப்புப் பணிகள் நடத்தப்பட வேண்டும்.

## மூன்று மாநிலங்களிலும் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள்

- 1000 புதிய ஆதிவாசி மாணவர்களுக்கு கல்வி பணிக்கு உதவுதல்.
- சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படுதல்.
- ஆரம்ப சுகாதார கல்வி பயிற்சி சுதேச ஊழியர்கள் குடும்பத்திற்கு வழங்குதல்.
- 100 புதிய கிராமங்களில் ஆழ்குழாய் குடிநீர் வசதி உருவாக்குதல்.
- 12000 எழுதப்படிக்க தெரியாத விசுவாசிகளுக்கு முதியோர் கல்வித் திட்டத்தை செயல்படுத்துதல்.
- 200 சுதேச ஊழியர்களுக்கு B.Th. படிப்பிற்கான ஏற்பாடுகளை செய்தல்.
- 1000 சபைகளுக்கான Shalom Literature Centre உருவாக்குதல்.


முதியோர் கல்வி பயிற்சிக் குழு

- 25,000 வேத புத்தகங்கள் குறைந்த விலையில் வழங்குதல்.
- மாதந்தோறும் 50 மையங்களில் சிறப்பு உபவாச கூடுகைகள், அற்புத சுகமளிக்கும் கூட்டங்கள்; பகுதிவாரியான எழுப்புதல் கூட்டங்களை நடத்துவது.
- இயேசு திரைப்பட ஊழியங்கள் மூலம் 1000 கிராமங்களை சந்திப்பது.

## மேற்கண்ட திட்டங்களை நிறைவேற்ற

- ரூ. 2500 மாதந்தோறும் கொடுத்து ஜெபித்து தாங்கும் சுதேச ஊழியர் ஆதரவாளர்கள் 400 பேர்கள் தேவை.
- ரூ. 5 இலட்சம், ரூ. 3 இலட்சம், ரூ. 2 இலட்சங்கள் நிதி உதவி தந்து 250 ஆலய கட்டுமான நிதி ஆதரவாளர்கள் தேவை.
- ரூ. 150 வீதம் 25 ஆயிரம் வேதாகமங்களைக் கொடுக்கும் ஆதரவாளர்கள் தேவை.
- ரூ. 500, ரூ.1000 மாதந்தோறும் ஜெபித்து கொடுத்து உதவும் ஷாலோம் மிஷெனரி பணி பங்காளர்கள் 3000 பேர்கள் தேவை.
- ரூ. 40,000 செலவில் இயேசு திரைப்பட ஊழியத்திற்கு 12 LCD புரொஜக்டர்கள் தேவை.
- 1000 ஆதிவாசி மாணவர்களுக்கு ரூ. 700 மாதந்தோறும் கொடுத்து ஜெபித்து தாங்கும் ஆதரவாளர்கள் தேவை.

தேவன் தந்த திறந்த வாசல் மற்றும் திரளான அறுவடையை பெற்றுக் கொள்ள அறுவடை பணியின் பங்காளர்களாக ஜெபித்து தாங்க முன் வாருங்கள். எந்த காரியத்திற்காக காணிக்கை கொடுக்கிறீர்களோ அதற்கான சிறப்பு அறிக்கையுடன் தேவையான புகைப்படங்கள், வீடியோ, சி.டி. அனுப்பி வைக்கப்படும். 2020க்குள் முழு பீல் மக்களும் இரட்சிக்கப்பட குடும்பமாக, சபையாக, ஊழிய ஸ்தாபனங்களாக, ஜெபக்குழுவாக தாங்க முன்வாருங்கள். மற்றவர்களுக்கு இந்த தரிசனப் பணியை இம்மலர் மூலமாக அறிமுகப்படுத்துங்கள், முடியுமானால் ஷாலோம் பிரதிநிதியாக செயல்பட முன் வாருங்கள்.

# வெள்ளி விழா ஆண்டு சிறப்பு கட்டிடப் பணி திட்டங்கள்

## ஷாலோம் பவன் (Shalom Bhavan)

தேவ கிருபையால் உருவாக்கப்பட்ட 25 வருட பணிகளை நிர்மானிக்கவும் செயல்படுத்தவும் குஜராத்தில் தாகோத்தில் பணித்தள அலுவலகம் உள்ளது. இந்த கட்டிடம் 30 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட பழைய கட்டிடமாகும். சுமார் 4000 சதுர அடி நிலத்தில் அமைந்துள்ளது. இதை உடைத்து விட்டு புதிய அலுவலக கட்டிடத்தை எழுப்ப வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. இந்தக் கட்டிடம் இல்லாமல் மூன்று இடங்களில் வாடகை கட்டிடங்களில் பல பணிகள் நடந்து வருகிறது.

- 3 மாநில திருச்சபைகளுக்கான (Synod Diocese Network) ஒருங்கிணைப்பு அலுவலகம்
- சபை வளர்ச்சிக்கான திட்ட மையம்
- ஊழியர் பயிற்சி, வேதாகமப் பயிற்சி, ஓய்வுநாள் பள்ளி பயிற்சி; VBS பயிற்சி போன்ற அனைத்து Training Programmes.




- Finance Department
- சுதேச ஊழியர்கள், ஆதிவாசி மாணவர்கள், சபை கட்டுதல் போன்ற அனைத்து ஊழியங்களுக்கான ஆதரவாளர்கள் அறிக்கை மொழியாக்கம் செய்து தமிழ், ஆங்கிலத்தில் Type செய்து அனுப்பும் Sponsor Related Dept.
- மாத பத்திரிகைக்கான செய்திகளை அனுப்பும் Communication Department.
- 1000 திருச்சபைகளுக்கும், விசுவாச குடும்பங்களுக்கு தேவையான வேதாகமம், வசனங்கள் CD/ VCD போன்ற பொருட்களை வழங்க Shalom Literature Service Department.
- 24 மணிநேர ஜெப சேவை மற்றும் பீல் மக்கள் எழுப்புதல், தேசத்தின் எழுப்புதலுக்கான (விடுதலைக்காக ஜெபிக்க வருவோர்; ஆலோசனைக்காக வருபவர்களை சந்திக்க) ஷாலோம் ஜெப மையம்.
- பீலி, பிலோடி, வாகுடி, ஹிந்தி, குஜராத்தி மொழிகளில் பாடல்கள், செய்திகள் Audio / Video மூலம் தயாரித்தலும், 1000 சபைகளுக்கு வழங்கவும், ஷாலோம் முன்னேற்ற பணிகளுக்காக குறிப்பாக Sponsor-க்கு அனைத்து ஊழிய அறிக்கைகளை Photo / DVD மூலம் அனுப்ப Shalom Media Department.
- மற்றும் Gen. Admin; Hospitality for Visitors; Maintenance போன்ற பணிகள்.
- ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் நடைபெறும் கல்விப்பணி, முன்னேற்றப் பணிகள் Compassion Projects / Health Projects கண்காணிக்கப்பட அமைத்தல்.
- போதகர்கள், தலைவர்கள், மூப்பர்கள் போன்ற 100 பேர்கள் கூடி ஜெபிக்க, ஆலோசிக்க Conference Hall கட்டப்பட வேண்டும்.
- பேராயர் மற்றும் பேராயர் அம்மா அவர்களுக்கான அலுவலக அறைகள்.
- மேலும் இதர பணிகள்....

அனைத்தும் நிறைவேற்றப்பட Car & Two Wheeler Parking வசதிகளுடன் கூடிய Ground floor -ருடன் சேர்த்து குறைந்தது 3 அடுக்குமாடி கட்டிடம் கட்டப்பட வேண்டும்.

## அந்தர்வேலியா ஷாலோம் பயிற்சி மையம்

இந்நாட்களில் மத்தியப்பிரதேசத்தில் பீல் மக்கள் மத்தியில் எழுப்புதலை கட்டளையிட்டு வருகிறார். ஊழியர்கள் கூடுகை, மூப்பர்கள் கூடுகை, வாலிபர் கூடுகை, சிறுவர்கள் முகாம், எழுப்புதல் முகாம்கள், ஜெபமுகாம்கள் மற்றும் பகுதிவாரிய திட்டக்கூடுகைகளை நடத்த அந்தர்வேலியா கிராமத்தில் தேவன் நமக்கு சுமார் 2 ஏக்கர் நிலத்தை தந்துள்ளார்.

அங்கு 120 X 40 அளவில் Hall ஒன்றும் மேலும் தேவையான அறைகள் கட்டப்பட Compound wall கட்டப்பட இரண்டு ஊழியர்கள் தங்கியிருக்க, ஜெப ஊழியங்கள் நடத்தப்பட கட்டிடங்கள் எழுப்பப்பட வேண்டும்.

## ஷாலோம் ஆதிவாசி மாணவர் விடுதி ஹரிநகர் மத்தியப்பிரதேசம்

மத்தியப்பிரதேசத்தில் ஹரிநகர் கிராமத்தில் அமைந்துள்ள Mont Fort English Medium School –ல் சுமார் 25 கி.மீ. சுற்றுவட்டாரத்தில் இருந்து ஊழியர்களின் பிள்ளைகள் சுமார் 60 பேர்கள் படித்து வருகிறார்கள். தற்போது சிறிய வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து அதில் இந்த 60 மாணவர்களையும் தங்க வைத்து படிக்க வைத்து வருகிறோம். இந்தப் பிள்ளைகளுக்கு சரியான ஹாஸ்டல் கட்டிடம் மாணவர்களுக்கு மற்றும் மாணவிகளுக்கு தனித்தனி அறைகள், இரண்டு வார்டன் அறைகள், சமையல் அறை, உணவருந்தும் ஹால், படிப்பதற்கான ஹால் மற்றும் கழிவறைகளுடன் கூடிய ஷாலோம் ஆதிவாசி மாணவர் விடுதி கட்டப்பட வேண்டும்.

## ஷாலோம் மிஷன் பள்ளி மற்றும் விடுதி பிஜல்பூர் இராஜஸ்தான்

தேவ கிருபையால் 30 பிள்ளைகளுடன் சிறிய வீட்டில் ஆரம்பிக்கப்பட்ட ஷாலோம் பள்ளி இன்று இராஜஸ்தானில் பிஜல்பூர் கிராமத்தில் 1 முதல் 8 வரை வகுப்புகள் நேர்த்தியாக நடைபெற்று வருகிறது. குறிப்பாக நம் இராஜஸ்தான் ஊழியர்கள், மூப்பர்கள் பிள்ளைகள் 300க்கும் அதிகமாக படித்து வருகிறார்கள். கட்டப்பட்ட சிறிய அறைகளில் தான் பள்ளி வகுப்புகள் உள்ளது. பகல் வகுப்பறையாகவும் இரவில் தங்கும் அறையாகவும் உபயோகித்து வருகிறார்கள். வெள்ளிவிழா ஆண்டில் பள்ளிக்கூடத்துக்கு 10 அறைகள் மற்றும் 100 பெண் பிள்ளைகளுக்கான விடுதி அறைகள் கட்டப்பட வேண்டும்.

மேற்கண்ட 4 வெள்ளி விழா திட்டங்களை நிறைவேற்ற குறைந்தது ரூ. 300 இலட்சங்கள் தேவைப்படுகிறது. குறிப்பாக ரூ. 1 இலட்சம் கொடுக்கக்கூடிய 300 ஆதரவாளர்கள் அல்லது 50 ஆயிரம், 20 ஆயிரம், 10 ஆயிரம் அல்லது தங்களால் முடிந்த காணிக்கையைக் கொடுக்கக் கூடிய ஆதரவாளர்களை குடும்பமாக, குழுவாக, ஊழியங்களாக, சபைகளாக தேவன் எழுப்பும்படியாக ஜெபித்து தாங்க முன் வாருங்கள். மட்டுமல்ல மாபெரும் வெள்ளிவிழா திட்டத்திற்கென உங்களால் முடிந்த நிதி உதவியை காணிக்கையாக ஜெபித்து அனுப்புங்கள். நிதி உதவி அனுப்பும்போது "ஷாலோம் வெள்ளிவிழா திட்டத்திற்கான நிதி உதவி" என குறிப்பிட்டு அனுப்பவும். குறிப்பாக ஜெபித்து கொடுக்கக்கூடிய புதிய ஆதரவாளர்களை அறிமுகம் செய்து கரம் கொடுக்க முன் வாருங்கள்.

**"......எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்லவேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்."** நெகே. 2:18

மேலும் விபரங்களுக்கு : **Bishop. V. Devadass,** Gujarat. Cell : 09377445468
தொடர்புக்கு : **Bro. Sam,** (Manager) Tuticorin. Cell : 9345675468

# சகோ. யூத ராஜசிங்கம் (சென்னை) அவர்கள் குடும்பத்தாரின் பணித்தள வருகை



நஹார்புரா, ம.பி. கிராம ஆலய பிரதிஷ்டை



கலாச்சார வரவேற்பு



பாடல் & ஆராதனை வேளை



செய்தி & பகிர்வு வேளை



கூடியிருந்த தேவ ஜனங்கள்

# சகோ. யூத ராஜசிங்கம் (சென்னை) அவர்கள் குடும்பத்தாரின் பணித்தள வருகை அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த ஜுன் மாதம் 20 & 21 ஆகிய தேதிகளில் நானும் (சகோ. யூதராஜ சிங்கம்) எனது தகப்பனார் திரு. பால்ராஜ் அவர்களும், எனது தாயார் திருமதி. குணசீலி அவர்களும், எனது மனைவி திருமதி. ஜெபா அவர்களும் ஷாலோம் ஊழியங்கள் மற்றும் பணித்தளங்களைப் பார்வையிட்டோம்.

20–ம் தேதி மாலையில் மத்தியப்பிரதேசத்திலுள்ள அந்தர்வேலியா மற்றும் மேந்திக்கேடா ஆகிய ஆலயங்களைப் பார்வையிட்டு, ஊழியர் குடும்பத்தையும் சந்தித்தோம். 21–ம் தேதியன்று ஞாயிற்றுக் கிழமையன்று மத்தியப்பிரதேசத்திலுள்ள ஹரிநகர் மாணவர் விடுதியையும், சாகுவா கிராம ஆலயத்தையும், தேவ்கா கிராம ஆலயத்தையும் பார்வையிட்டோம். அங்கு மக்கள் உற்சாகத்துடன் தேவனை ஆராதித்து கொண்டிருந்தார்கள். நாங்கள் எங்கள் வாழ்த்துச் செய்திகளைப் பகிர்ந்து கொண்டோம். அதைத் தொடர்ந்து மத்தியப்பிரதேசத்திலுள்ள நஹார்புரா கிராமத்தில் எங்களது குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதியுதவியின் மூலம் கட்டப்பட்ட ஆலயத்தை தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்தோம்.

இந்த இரண்டு நாட்களும் நாங்கள் கடந்து சென்ற பணித்தளங்களில் அநேக மாற்றங்களைக் காண முடிந்தது. பீல் ஆதிவாசி மக்கள் விசுவாசத்திலும் ஆவிக்குரிய வாழ்விலும் வளர்ந்து வருவதைக் கண்ணாரக் கண்டு தேவனுக்கு மகிமை செலுத்தினோம். இதை வாசிக்கும் அன்பர்களே! ஷாலோம் ஊழியம் நிச்சயமாக தேவ தரிசனம் பெற்ற ஊழியம் என்பதில் எந்த வித சந்தேகமுமில்லை. நிச்சயமாக தேவன் இந்த பீல் மக்களை நேசிக்கிறார் என்பதை பார்க்க முடிகிறது. நீங்களும் ஷாலோம் ஊழியத்தை உங்களது ஜெபத்தின் மூலம் மற்றும் உதாரத்துவமான காணிக்கையின் மூலமாக தாங்கும்படியாகவும், இந்த பீல் மக்கள் தரிசனப்பணியில் ஆலயம் கட்டப்படாத கிராமங்களில் ஆலயம் கட்டிக் கொடுக்கும்படிக்கும் முன் வாருங்கள்.

## ஷாலோம் கிராம ஆலயம் நஹார்புரா




மத்தியப்பிரதேசம், ஜாபுவா மாவட்டத்திலுள்ள பெட்லாவத் தாலுகாவில் இந்த நஹார்புரா கிராமம் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தைச் சேர்ந்த சகோ. ராகேஷ் பில்வாள் அவர்களின் குடும்பத்தினர் வியாதியினாலும் வறுமையினாலும் மிகுந்த கஷ்டப்பட்டார்கள். இந்த நேரத்தில் ஷாலோம் ஊழியர் சகோ. கராக்கியா டாமோர் அவர்கள் இயேசுவைப் பற்றிக் கூறி இவருடைய குடும்பத்திற்காக ஜெபித்த போது தேவன் வியாதியிலிருந்தும், வறுமையிலிருந்தும் விடுதலைக் கொடுத்தார். இந்த அற்புதத்தின் மூலம் இயேசுவை சொந்த இரட்சகராக குடும்பமாக ஏற்றுக் கொண்டார்கள். பின்பு ஊழியம் செய்ய வேண்டுமென்ற பாரம் ஏற்பட்டு தன்னை ஊழியத்திற்கு அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, தனது சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார். இந்த சபையில் தற்போது 40 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஆராதித்து வருகிறார்கள். ஊழியர். ராகேஷ் பில்வாள் காணிக்கையாக கொடுத்த தனது சொந்த நிலத்தில் தேவ நாம மகிமைக்காக புதிய ஆலயம் கட்டப்பட்டு, 21–06–2015 அன்று சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் ஜெபிக்க, திரு. பால்ராஜ் (சென்னை) அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தேவனுக்கே மகிமை!

## குஜராத், இராஜஸ்தான் மத்தியப்பிரதேசம் மாநிலங்களில் நடைபெற்ற ஷாலோம் ஊழியப்பாதையில் 24வது வருட நிறைவு ஸ்தோத்திர கூடுகைகள் 14, 15, 16 ஜுலை 2015



# ஷாலோம் ஊழியப்பாதையில் 24வது வருட நிறைவு ஸ்தோத்திர கூடுகை 14, 15, 16 ஜூலை 2015

தேவ கிருபையால் ஜுலை 14, 15, 16 தேதிகளில் குஜராத்தில் தாகோத் ஷாலோம் மையத்தில் தெல்சர் ஷாலோம் ஆலயத்திலும், மத்தியப்பிரதேசத்தில் அந்தர்வேலியா ஷாலோம் ஆலயத்திலும், இராஜஸ்தானில் கோய்கா ஷாலோம் பேராலயத்திலும் அனைத்து ஷாலோம் லே சுதேச ஊழியர்கள் மற்றும் அலுவலக மற்றும் Project ஊழியர்களாக 680 குடும்பங்கள் இணைந்து தேவனைத் துதித்து ஆராதித்து மகிமைப்படுத்தினார்கள். மும்பையிலிருந்து பாஸ்டர். வீரேந்திர பாட்டில் அவர்கள் சிறப்பு ஆராதனையை நடத்தினார்கள். சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் 24 வருட ஊழிய அனுபவத்தை வீடியோ காட்சிகள் மூலமாக எடுத்துரைத்த போது அனைவரின் உள்ளங்களிலும் நன்றி பெருக்கெடுத்தது. ஹிந்தியில் 24 வருட ஊழிய அறிக்கை புத்தகம் வெளியிடப்பட்டது.

தொடர்ந்து 25வது வருட வெள்ளி விழா ஆண்டில் தேவனுக்காக அனைத்து ஊழியர்கள், சபைகள், விசுவாசிகள் உழைக்கவும் இருமடங்கு வளர்ச்சியைக் காண அர்ப்பணித்தார்கள். 1000 சபைகள், 1000 சுதேச ஊழியர்கள், 1 இலட்ச குடும்பங்கள் எழும்புவார்கள் என்று விசுவாசித்து ஜெபித்து அர்ப்பணித்தார்கள். பேராயர். தேவதாஸ் அவர்கள் உபாகம் 1:11 நீங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் ஆயிரமடங்கு அதிகமாகும்படி உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொல்லியபடியே உங்களை ஆசீர்வதிப்பாராக என்ற வாக்குத்தத்த வசனத்தின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள உபா. 6ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட ஆறு காரியங்களை ஷாலோம் சபை நிறைவேற்ற வேண்டும் என செய்தியளித்தார்கள். அனைவரும் குடும்பமாக கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றார்கள்.

விசேஷமாக ஊழியத்தில் 24வது வருட நிறைவு மற்றும் பேராயர் குடும்ப வாழ்க்கையில் 30 வருடங்கள், மேலும் தேவன் தந்த பேரன் Zion Kryston நினைத்து துதித்து சுதேச ஊழியர்கள் பேராயர் குடும்பத்திற்கு சிறப்பு வரவேற்பு கொடுத்து அன்பு பரிசுகளை வழங்கி கௌரவித்தார்கள். இந்த கூடுகையில் பேராயர். தேவதாஸ், சகோதரி வஹிதா தேவதாஸ், டைட்டஸ்–மெர்லின், பேரன் Zion Kryston மற்றும் ஷாலோம், மகள் ஷெக்கினா என முழு குடும்பமாக பங்கு பெற்றது குறிப்பிடத்தக்கது. அனைவருக்கும் சிறப்பு ஐக்கிய விருந்து வழங்கப்பட்டது. வெள்ளி விழா திட்டங்களான ஷாலோம் பவன், அந்தர்வேலியா பயிற்சி மையம், பிஜல்பூர் ஷாலோம் பள்ளிக்கூட விடுதி, ஹரிநகர் ஷாலோம் மாணவர் விடுதிக்கான தேவையான நிதி உதவிக்காக சிறப்பு காணிக்கைகளை ஷாலோம் சபை மூலமாக வழங்க உற்சாகத்துடன் தீர்மானித்தார்கள். 1991ம் ஆண்டு ஒரு குடும்பமாக தேவன் ஆரம்பித்த ஊழியத்தில் 25ம் ஆண்டு 580 சுதேச ஊழியர் இணைந்து கர்த்தருடைய சேனையாக எழுப்பப்பட்டு உள்ளதை கண்டு தேவனை துதிப்போம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

## தேவனுக்கே மகிமை!

**13.06.2015** சனிக்கிழமை அன்று மாலை சென்னையில் Corporate Fellowship மூலமாக நடைபெற்ற கூடுகையில் நமது ஷாலோம் பேராயர். வே. தேவதாஸ் அவர்கள் கலந்துக் கொண்டு தேவ செய்தியளித்தார்கள். தேவனுடைய நாமம் மகிமைப்பட்டது.

**14.06.2015** ஞாயிறு அன்று சென்னை சேலையூரிலுள்ள, C.S.I. St. Mark's தேவாலயத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் பேராயர். வே. தேவதாஸ் அவர்கள் கலந்துக் கொண்டு தேவ செய்தியளித்தார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகர், Rev. லாசர் ஜெபதாஸ் & சபை செயலாளர் சகோ. டேவிட் பிராங்ளின் ஆகியோருக்காகவும், கமிட்டி அங்கத்தினர்கள், அனைவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**21.06.2015** ஞாயிறு அன்று தூத்துக்குடி, சிதம்பரநகரிலுள்ள CSI அபிஷேக நாதர் ஆலயத்தில் நடைபெற்ற இரண்டு ஆராதனைகளிலும் நமது ஷாலோம் பேராயர். வே. தேவதாஸ் அவர்கள் கலந்துக் கொண்டு நமது ஷாலோம் ஊழியங்களைக் குறித்து பகிர்ந்ததோடு தேவ செய்தியும் வழங்கினார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகர். Rev. ஸ்டீபன் நீல் அவர்களுக்காகவும், சபை கமிட்டி அங்கத்தினர்களுக்காகவும், ஷாலோம் பிரதிநிதி சகோதரி. செல்வ சீலி அவர்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.



## நாட்டு நடப்புச் செய்திகள்...

- லண்டனில் விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடைபெற்றது. இதில் கலப்பு இரட்டையர் பிரிவு பைனலில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், சுவிட்சர்லாந்தின் மார்டினா ஹிங்ஸ் ஜோடி – ஆஸ்திரியாவின் அலெக்சாண்டர் பெயா, ஹங்கேரியின் டிமியா பபோஸ் ஜோடியை சந்தித்து. முதல் செட்டை 6–1 என மிகச் சுலபமாக கைப்பற்றியது பயஸ் ஜோடி, 2வது செட்டை 6–1 என தன் வசப்படுத்தி, பயஸ் ஜோடி சாம்பியன் பட்டத்தை வென்றது.
- ஒரு குறிப்பிட்ட வகை காது கேளாமைக்கு வைரஸ் மூலம் சிகிச்சையளிக்க முடியும் என விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். காது கேளாமை குறைபாடுள்ள குழந்தைகளில் பாதிக்கும் மேற்பட்டவர்களுக்கு மரபணு பிரச்சனைகள் காரணமாக இருக்கின்றன என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். எலிகளிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் மரபு பிரச்சனையை வைரஸ் மூலம் சரி செய்து, சில வகை காது கேளாமை பிரச்சனையை போக்க முடியும் என தெரிவித்துள்ளனர்.
- 1250 கிலோமீட்டர் வேகத்தில் பயணிக்கும் குழாய் ரெயில் போக்குவரத்து சோதனைத் திட்டம் அமெரிக்காவில் ஆரம்பமாகவுள்ளது. புல்லட் ரெயில், மெட்ரோ ரெயில், மோனோ ரெயில், என்று சுரங்கப்பாதையிலும், ஆகாயத்திலும் மக்கள் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிக பட்சமாக சீனாவிலும், ஜப்பானிலும் சுமார் 500 கி.மீ. வேகத்தில் ஓடும் ரெயில்கள் இருக்கின்றன. வரும் காலங்களில் ராட்சத குழாய்க்குள் இப்போதுள்ளதைக் காட்டிலும் பல மடங்கு வேகத்தில் ரெயில்கள் பயணிக்கும்.
- இந்தியாவில் ஹெச்.ஐ.வி. வியாதியால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 20 சதவீதம் குறைந்துள்ளது. வரும் 2030ம் ஆண்டிற்குள் உலகில் இருந்து எய்ட்ஸ் நோயை முற்றிலும் ஒழிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் புதிதாக ஹெச்.ஐ.வி. வைரஸால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை உலகளவில் 35 சதவீதம் குறைந்துள்ளதாகவும், அதே போல் எய்ட்ஸ் தொடர்பான இறப்பு 41 சதவீதம் குறைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

**HEAD OFFICE**

**M/S. SHARING LOVE MISSION,**

New No. 5A/323, Old No. 5/168,-3rd Street, Caldwell Colony,
TUTICORIN-628008 Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

**CHENNAI BRANCH OFFICE**
**Bro. John Jeyasingh**
No.102-2nd Main Road
Sathya Nagar, Padi,
CHENNAI - 600050.
Cell : 9698244577

**MARTHANDAM BRANCH OFFICE**
**Bro. Selvadurai.G**
Bethel,
25-7/A 1-Block 25, Paruthivilai,
Kannakode, Marthandam - 629165
Cell : 9487689869

**MUMBAI BRANCH OFFICE**
**Bro. Prabhakaran. P.**
C/o. Mr. P.Immanuel,
C-2, Plot No.123-Old Mhada Colony,
Mangalya Co.Op.Society Ltd,
Pokharan Road No.2,
Thane West - 400610
Cell : 9768282699

**NAGERCOIL BRANCH OFFICE**
**Bro. S. Robinson**
Ebenezer Plaza, Parama Street,
WCC Junction,
Nagercoil - 629001
Cell : 9688144522

**MADURAI BRANCH OFFICE**
**Bro. Chandra Paul. S**
6/3, Nellaiappar Puram 7th Street,
Tirunagar (p.o)
MADURAI-625006
Cell : 9698644522

**TIRUNELVELI BRANCH OFFICE**
**Bro. David. R**
56 A/4,-C.S.I Church South Street,
(Upstairs) STC road,
Perumalpuram, Palayamkottai
TIRUNELVELI-627007
Cell 9698844599

*குழந்தை ஆதரவுத் தொகை மற்றும்*
*சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப...*

வங்கிக் கணக்கின் பெயர் : **SHALOM CHARITY MISSION**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**

**174100710400061**
**Branch : Tiruchendur Road**
(IFS Code : TMBL0000174)

AXIS BANK

**105010100096779 -**
(IFS Code : UTIB0000105)

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- ❖ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்துக் கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ காணிக்கைகளை **E.M.O.** மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அப்படி அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கொடுக்கும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ❖ **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு **D.D.** அல்லது **Cheque** எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவுத் தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.
- ❖ உங்களது வங்கிக் கணக்கிலிருந்து, **Net Transfer** மூலமாகவும் காணிக்கைகளை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.
- ❖ நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க்கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலம் **Deposit** பண்ணலாம்.
- ❖ எங்களது ஷாலோம் கிளை அலுவலகங்களுக்கு நேரடியாக வந்தும் காணிக்கைகளைக் கொடுத்து ஜெபித்துச் செல்லலாம்.

---

### வங்கிக் கணக்கின் பெயர் : Sharing Love Mission

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**TMB** — **Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

**AXIS BANK** — **A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

**ICICI Bank** — **A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலமாகவோ அல்லது **Net Transfer** மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள்.
தொடர்புக்கு : **9698244522**

## பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் நற்செய்தி பணியில் எனது பங்கு

### (ஜெபித்து தேவையான இடத்தில் ✓ குறியிடவும்)

- ☐ பீல் மக்களின் இரட்சிப்பிற்காக தினமும் ஜெபிப்பேன்.
- ☐ எங்கள் பகுதியில் ஷாலோம் ஜெபக்குழு நடத்த முன் வருகிறேன்.
- ☐ மாதம் ஒரு முறை வெளிவரும் ஷாலோம் மிஷனெரி செய்தி மலரை எனக்கு அனுப்பவும்.
- ☐ ரூ. 2500/– மாதந்தோறும் அனுப்பி பீல் சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்க முன் வருகிறேன்.
- ☐ மாதம் ரூ. 500/– செலுத்தி கிராம ஊழியத்தைத் தாங்க முன் வருகிறேன். (Shalom Village Sponsor)
- ☐ மாதம் ரூ. 1000/– செலுத்தி ஷாலோம் மிஷன் பங்காளராக முன் வருகிறேன். (Shalom Mission Partner)
- ☐ ரூ. 700/– மாதந்தோறும் அனுப்பி ஒரு ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வருகிறேன். (1 ஆண்டிற்கு ரூ. 8,400) (Shalom Charity Mission)
- ☐ ரூ. 1000/– செலுத்தி ஷாலோம் ஆயுள் கால அங்கத்தினராக முன் வருகிறேன். (Shalom Life Time Partner)
- ☐ ரூ. 40,000/– கொடுத்து கிராமங்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க LCD Projector வாங்கிக் கொடுக்க முன் வருகிறேன்.
- ☐ ரூ. 45,000/– கொடுத்து சுதேச ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடுக்க முன் வருகிறேன்.
- ☐ ரூ. 10,000/– கொடுத்து ஒரு ஷாலோம் சபைக்குத் தேவையான ஸ்பீக்கர், மைக் மற்றும் இசை உபகரணங்கள் வாங்கிக் கொடுக்க முன் வருகிறேன்.
- ☐ ரூ. 2 லட்சங்கள் or 3 லட்சங்கள் or 5 லட்சங்கள் நிதி உதவி தந்து கிராம ஆலயம் கட்டித் தர முன் வருகிறேன்.
- ☐ ரூ. 150/– வீதம் பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு ......... குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் வாங்கிக் கொடுக்க விரும்புகிறேன்.
- ☐ அவ்வப்போது மிஷனெரி காணிக்கை கொடுத்து தாங்குவேன்.
- ☐ மாதந்தோறும் என்னால் முடிந்த காணிக்கை ரூ. .................. அனுப்பி ஊழியத்தை ஜெபித்துத் தாங்க முன் வருகிறேன்.
- ☐ இந்த மிஷனெரி பணிக்கு எங்கள் பகுதியில் பிரதிநிதியாக செயல்பட விரும்புகிறேன்.

எனது ஜெபக்குறிப்புகள் / My Prayer Request :

## எனது முகவரி / *My Address*

பெயர் / Name ______________________

முகவரி / Address ______________________

______________________

ஊர் / Town ______________________

மாவட்டம் / Dist. ______________________

பின்கோடு / Pin. ______________________

தொலை பேசி/ Ph. ______________________

e-mail ______________________

ஷாலோம் ஊழியங்களைத் தாங்க முன் வருவோர் இந்தப் படிவத்தினை நிரப்பி, கத்தரித்து கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்


**SHARING LOVE MISSION**

New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu. Phone: 0461 - 2375468 Cell : 9345675468
email- info@shalommission.in website:www.shalommission.in

# <u>அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்</u>
# <u>சந்தாவைக் குறித்து....</u>



கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே, தேவன் தந்த தரிசனப்பணியான ஷாலோம் ஊழியங்கள் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் கடந்த 24 வருடங்களாக ஆத்தும பாரத்துடன், பலவிதமான தேவைகள், கஷ்டங்கள், எதிர்ப்புகள் மத்தியிலும் உண்மையாக உழைத்து வருகிறோம். ஆத்தும பாரத்துடன் நாங்கள் மாதந்தோறும் அனுப்பும் இந்த அன்பு பகிர்வு இயக்கம் இதழில் தேவனுடைய வார்த்தையுடன், பணித்தள சாட்சிகள், அறிக்கைகளை அனுப்புகிறோம்.

இந்தப் பத்திரிகை ஷாலோம் ஊழியத்திற்கென்று ஜெபித்து தியாகத்துடன் காணிக்கை அனுப்புகிற, அதாவது மிஷனெரி ஆதரவு, ஷாலோம் பங்காளர் ஆதரவு, ஆதிவாசி மாணவர் கல்வி உதவி, ஆலயக்கட்டுமான பணி, வேதபுத்தகங்களுக்கான நிதி உதவி என ஏதாவது ஒரு வழியில் தாங்குவோருக்கு மட்டும் அனுப்பப்படுகிறது.

ஆகவே இந்த வருடத்தில் ஒருமுறைகூட நீங்கள் இந்த மிஷனரி தரிசனபணியான ஷாலோம் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்பாவிட்டால் இந்த மாதம் தயவாக காணிக்கை அனுப்ப அன்புடன் கேட்கிறோம். ஒரு வருடத்திற்கு ஒருமுறைகூட காணிக்கை அனுப்பவில்லையெனில் அடுத்தமாதம் முதல் அன்பு பகிர்வு இயக்க பத்திரிகை உங்களுக்கு அனுப்ப இயலாது என்பதை தெரிவிக்கிறோம். குறைந்தது வருட சந்தா ரூ.100 என்பதை நினைவுபடுத்துகிறோம். இன்றே செயல்பட அன்புடன் அழைக்கிறோம்.

## *முகவரி மாற்றங்களைத் தெரியப்படுத்துங்கள்*

- உங்களது முகவரியில் திருத்தங்கள் இருந்தாலோ, மேலும் நீங்கள் முகவரி மாறும்போதோ நீங்கள் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.
- இது நாங்கள் உங்களுடன் சரியாகத் தொடர்பு கொள்ளவும், நாங்கள் அனுப்பும் கடிதங்கள், பத்திரிகைகள், ஊழிய அறிக்கைகள், ரசீது, தபால்கள் சரியாக உங்களுக்குக் கிடைக்கவும் உதவும்.
- மேலும் உங்களது தொலைபேசி எண், மொபைல் எண் மற்றும் இ–மெயில் முகவரிகளை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.
- நீங்கள் அனுப்பும் காணிக்கை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்குக் கிடைத்தவுடன் உங்களுக்கு SMS மூலம் செய்தி தெரிவிக்கப்படும்.

**இந்த பத்திரிகையை வாசித்து விட்டு அப்படியே வைத்து விடாமல், மாபெரும் தேவையுள்ள இந்த மிஷனரி பணியை உங்கள் குடும்பத்தார் அல்லது நண்பருக்குக் கொடுத்து ஷாலோம் ஊழியங்களை அறிமுகப்படுத்தி ஜெபித்து தாங்க இணைத்து விட அன்புடன் கேட்கிறேன்.**

சகோதரரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள் - 1 தெச. 5:25



பேராயர். வே. தேவதாஸ், சகோதரி. வஹிதா தேவதாஸ்
சகோ. டைட்டஸ் - மெர்லின், Zion Kryston,
சகோ. ஷாலோம், சகோதரி. ஷெக்கினா.

புறஜாதியாரை வார்த்தையினாலும்
செய்கையினாலும் கீழ்ப்படியப்பண்ணும்படிக்கு,
அற்புத அடையாளங்களின் பலத்தினாலும்,
தேவ ஆவியின் பலத்தினாலும்,
கிறிஸ்துவானவர் என்னைக்கொண்டு
நடப்பித்தவைகளைச் சொல்வதல்லாமல்
வேறொன்றையும் சொல்ல நான் துணிவதில்லை.

– பரி. பவுல் (ரோமர் 15 : 18)